ஞாயிறு வெளியீடு

ஆண்டுச் சந்தா ரூபா 5
தனிப் பிரதி 0—1—3

இலங்கை 10 சதம்
மலாய் நாடு 8 காசு

REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 5 | காஞ்சிபுரம் 30—6—46 | இதழ் 10

# ★ கல்வி நீரோடை ★

"கல்வியூர் மிராசுதார் பஞ்சாபிகேச ஐயர்..............."

"அவருக்கென்ன?"

"அவருக்கென்னவாம்! அவரிருக்கிருர் தக்காளிப்பழம் போன்ற தளதளத்த மேனியுடன். நீரோடைக்கு மறுபக்கத்திலிருக்கிற கல்லூரணிக் கிராமத்தில்..........."

"கல்லூரணிக் கிராமமா? அதுவும் கல்வியூர்போல நீரோடைப் பாய்ச்சலுள்ள இடமாயிற்றே. கட்டுக்கலம்காணும், அன்றியும் முப்போகமும் விளையும். அந்தக் கிராமத்தையும் ஐயர் வாங்கிவிட்டாரா?"

"அடபோடா! அந்தக் கிராமத்தை அவர் வாங்குவதா? கல்லூரணியை உண்டாக்கியதே அவர்."

"அப்படியானல் நீரோடையின் இருமருங்கிலும் அவருடையவயல்கள் ஏற்பட்டுவிடுகின்றன."

"அதைத்தான்சொல்லவந்தேன். எப்படியோ நீரோடையைச்சூழ்ந்துள்ள பாய்ச்சல் இடங்களெல்லாம் ஐயர் கையில் சிக்கிவிட்டன. நீரோடையிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர்கூட மற்றவர்கள் நிலங்களுக்குப் பாய்வதில்லை. ஏழை எளியோரின் சிறு பங்குகள் வெடித்துக்கிடக்கும்பொழுது, ஐயரின் நிலத்தில் கதிர்சாய்ந்துகிடக்கிறது. அவர் நெல்லையா குவிக்கிருர், பொன்னைத்தான் குவிக்கிருர்"

"அப்படியானல் மற்றவர்களின் கதி என்ன ஆவதாம்?"

"அதைப்பற்றி அவருக்குக் கவலையேன்? ஊராரின் உழைப்பிலே உண்டு கொழுத்துத் திரியும் வசதியிருக்கும்பொழுது மற்றவர்களின் வாழ்வுபற்றி அலட்சியம் செய்யத்தான்வேண்டும். அனைவருக்கும் பொதுவான நீரோடை, ஐயரின் சொந்த சொத்தாகிவிட்டது."

"கலெக்டர் துரையிடம் சொல்வதுதானே."

"அது ஒன்றுதான் பாக்கி! கரடியாகக் கத்திப்பார்த்தாகிவிட்டது, அது துரையின் காதில் விழவில்லை. நாம் பேசுகிற மொழி அவனுக்குப் புரியாது. சிற்சில சமயங்களில் நம் கூக்குரல் அவன் காதில் விழுந்ததும், நம்முதுகில் அடிதான் விழுந்தது. ஐயர்கிழித்த கோட்டை அந்த வெள்ளைக்காரன் தாண்டுவதில்லை. ஐயரிடம் போனல் "சேரிக்குப்போடா" என்கிருர், வெள்ளைக்காரனிடம்போனல் "ஜெயிலுக்கு போடா" என்கிறன். இவைகளுக்கெல்லாம் ஒரே ஒரு வழிதான்."

* * *

கிராமப்புக்கம், நடக்கும் இத்தகைய உரையாடல். இந்த ஆதிக்கம், பயிர் அளவோடு முடியும். நீரோடையைக் கைப்பற்றி விட்டால் நிலங்களின், பலனை, ஓடை ஆதிக்கக்காரர் அடையாமல் வேறு யார் அடையமுடியும்! புறம்போக்குக்கூடத்தான், நீர்ப்பாசன வசதி கிடைத்துவிட்டால், புன்சிரிப்பைத் தரும் வயலாகும். நமது வயல் வறண்டுகிடக்கிறதே என்று மட்டும் வருத்தப்பட்டுப் பலன் என்ன! நீரோடையைக் கைப்பற்றி, பாய்ச்சல், சகலருக்கும், எல்லாநிலங்களுக்கும்கிடைக்குப்படி செய்ய,வழிஎன்னஎன்று கண்டறிய வேண்டும்.

வயல் விஷயம், வெறும் செல்வம் சம்பந்தப்பட்டது. கல்வி நீரோடை, வாழ்க்கை எனும்வயலை வளமாக்குவது. வாழ்வின் வளம், பெருக வேண்டுமானல், கல்வி நீரோடையின் தயவு வேண்டும். இந்த நீரோடையின் ஆதிக்கத்தை யார் பெற்று இருக்கிருர்களோ, அவர்களுக்கு வாழ்க்கைவளம் ஏற்படுகிறது. ஆரியர் இந்தக் கல்வி நீரோடையைத் தமது ஆதிக்கத்தில் வைத்துக் கொண்டுள்ளனர், எனவே அவர்கள் இனத்திலே, வாழ்வு தழைக்கிறது; அந்த நீரோடைக்கு வெகு தொலைவிலே இருப்பதால், தமிழரின் வாழ்வு, தற்குறித்தனம், நிரம்பிய தரிசுநிலம் இருக்கிறது. இந்தச் சூட்சமத்தை உணராமல் நம்கதிஇது! என்று கூறுவர் தமிழர். கல்வி நீரோடையின் நிலைபற்றியோ, அதனையார் கைப்பற்றியுள்ளனர் என்பது பற்றியோ, அதன் விளைவுபற்றியோ, எப்படி கல்விநீரோடையை அவர்களால் கைப்பற்ற முடிந்தது என்பதுபற்றியோ தமிழர் எண்ணிப் பார்ப்பதில்லை. பஞ்சாபிகேச ஐயரின் நிலம், மண்போட்டுப் பொன் எடுக்கும் இடம், என்று பேசுவது போலவே, சின்னசாமிஐயர்மகன் சீமைக்குச் சென்று படித்துவிட்டு வந்தார், சரசுவதி கடாட்சம் அது என்று பேசுவர். அவ்வளவுக்கு மேலே, சிந்தனை எழுது.

பெரியவர்கள், கல்வி நீரோடையின் நிலைபற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டார்கள், அதனுலேயே நம் இனச் சிறுவர்கள், கல்வித்துறையிலே, பிற்போக்கான நிலை பெற்றனர்.

"அதெல்லாம் ஐயமார்வீட்டுப் பசங்களுக்குத்தான்தரும்!"

"அந்தமூளையேமூளை. தனிரகம்"

"ஜாதிஅப்படிப்பட்டது.ஞானம் தானுக உதிக்கிறது"

"நம்மபசங்கள் சுத்த மக்கு! மண்டையிலேஏறவேகிடையாது. அதனுல்தானே அடுத்தத்தெருஐயர்கூட அன்று ஓர்நாள், "டே! உன் மகன்வாயிலே தர்ப்பையைப் போட்டுக் கொளுத்தினுல் கூடப் படிப்புவராது" என்றசொன்னர்"

"அதது கொடுத்துவைத்தஅளவு தானேகிடைக்கும்-படிப்புக்கூடத் தான்"

இவை, நம்மவரிடையே உலவும் சர்வ சாதாரணமான மொழிகள். இவைகளைக் கூறும்போது, இனத்தின் தாழ்வானநிலைமையைக்குறிப்பிடுகிரேம் என்ற நினைப்புக்கூடத் தோன்றுவதில்லை.

இவ்விதமான மொழிகளைக் கேட்டுக்கேட்டு, நம்இனச்சிறுவர்களேகூடத், தங்களுக்குப் படிப்பு வாராதென்று எண்ணம்கொண்டு விடுகின்றனர்.

படிப்புவராத இனம்—என்ற பழிச்சொல்,நமதுமக்கள்மீதுசுமத்தப்படுகிறது. சுமத்துவதுசுலபமாகிறது.

விளையாதகழனி— படிப்புவாராத இனம்!! ஏன்விளையவில்லை? நீர்ப்பாசனம் இல்லை! ஏன் நீர்ப்பாசனம் கிடைக்கவில்லை? நீரோடை நம்மிடம் இல்லை, வேறு நிலத்தானின் ஆதிக்கத்தில் இருக்கிறது. படிப்பு ஏன்வரவில்லை? கல்விஎனும்நீர் பாய்ச்சப்படவில்லை! ஏன்? கல்வி நீரோடையின் ஆதிக்கம், வேறு இடத்திலே இருக்கிறது. உண்மையாகவா? உண்மைதான்! இனிநாம் பேசவேண்டியதில்லை, புள்ளி விவரம்பேசும், கேளுங்கள்.

* * *

உழவரின் உழைப்பையே உரமாகக்கொண்டு,நல்லவிளைவைத்தருகிறவயல்களெல்லாம், உழைக்காத உல்லாசக்காரர்களிடம் எப்படிச் சிக்கியது என்று அந்த உழவர்களுக்குத் தெரியாது. ஆனல் ஒன்று மாத்திரம் அவர்களுக்குத் தெரிகிறது, ஊருக்குப்பொதுவான நீரோடைத் தண்ணீர்—ஊராரின் வரிப்பணத்தினுல் பராமரிக்கப்படுகிற தண்ணீர்த்,தேக்கம்ஐயரின்சொந்தச்சொத்தாகிவிட்டதென்று. அதுகூட நமக்குத்தெரிவதில்லை. அரசாங்கத்தாரின் பணத்தேக்கத்தில் குவிக்கப்பட்டுள்ள பணம் நமக்கு முழு அளவுக்கும் பயன்படுகிறதா என்று புரிவதில்லை.

உதாரணமாகக்கல்வித்துறையை எடுத்துக்கொள்வோம். கடைசியாக வெளிவந்துள்ள 1943—44ம் ஆண்டு சென்னை மாகாணக் கல்வி பதிகாரியின் அறிக்கைப்படி, அந்த ஆண்டில் 7-கோடி 23-லட்சம் ரூபாய் கல்விக்காகச்செலவுசெய்யப்பட்டுள்ளது. அதில் முதல் நிலை (பிரைமரி) பள்ளிக்கூடங்களுக்கு 3-கோடி 14-லட்சமும், இடைநிலை (மிடில்) பள்ளிக்கூடங்களுக்கு 17-லட்சரூபாயும், உயர்தர (ஹைஸ்கூல்) பள்ளிகளுக்கு 1-கோடி 26-லட்சமுமாகும். பெரும்பாலும் பள்ளிக்கூடங்கள் ஒன்று பிரைமரி, அல்லது ஹைஸ்கூல் ஆக இருப்பதால் மிடில் ஸ்கூல்கள் அதிகம் இல்லாதிருப்பது கவனிக்கத் தக்கது. இந்த மூன்று பகுதிகளிலும் 1-வது வகுப்பிலிருந்து 6-வது பாரமாகிய எஸ். எஸ். எல். ஸி. வரை கல்விபோதிப்பதாகும். சாதாரணமாக 5-வயதிலிருந்து, 16-அல்லது 17-வயதுவரைபடிப்பவர்கள் கல்வி பெறும் இடங்கள். இவைகளேயன்றி, ஹைஸ்கூல் படிப்பிற்கு பின்போ அல்லது அதற்கு ஒத்த முறையிலேயே தொழிற்கல்வியோ அல்லது வேறு ஒருதுறையில் சிறப்புக் கல்வியோ தரும்பள்ளிக்கூடங்களும் உண்டு. அவைகளாவன ஆர்ட் ஸ்கூல், மெடிகல் ஸ்கூல், டிரெயினிங் ஸ்கூல், என்ஜினியரிங் ஸ்கூல் போன்றவையாகும். இந்தக் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 42,79,474. இந்த 43 லட்சமும் செலவிடப்பட்டுள்ள விதத்தில் நாட்டின் பெருங்குடிமக்களுக்கு விளைந்துள்ளபலனைக்கணக்கிட்டுப் பார்க்கலாம்.

(குறிப்பு: இந்தத்தொழில்—சிறப்புள்ளபள்ளிக்கூடங்களாகியமெடிகல் ஸ்கூல், என்ஜினியரிங் ஸ்கூல் முதலியவைகளை மெடிகல்காலேஜ், என்ஜினியரிங் காலேஜ் என்பவைகளுடன் ஒன்முகவைத்து எண்ண வேண்டாம். இவை குறைந்த படிப்பு கொடுப்பவை, பின் கூறப்பட்டுள்ள கல்லூரிகள் உயர்ந்த படிப்பும், அதற்கான பட்டமும் கொடுப்பவை.)

தொழிற் கல்வி—சிறப்புக் கல்வி பள்ளிக்கூடங்கள்.

| | பார்ப்பன மாணவர் | பார்ப்பனரல்லாத மாணவர் |
|---|---|---|
| ஆர்ட் ஸ்கூல் | 71 | 198 |
| மெடிகல் ஸ்கூல் | 211 | 240 |
| டிரெயினிங்ஸ்கூல் | 1683 | 5,653 |
| டெக்னிகல் ஸ்கூல் | 494 | 3687 |
| குருடுசெவிடு ஸ்கூல் | 18 | [illegible] |
| என்ஜினியரிங் ஸ்கூல் | 162 | 76 |
| கமர்சியல் ஸ்கூல் | 3604 | 3104 |
| மற்றப் பள்ளிகள் | 2205 | 1,824 |

முன்னதாகக் குறிப்பிட்டபடி இந்தப்பள்ளிக்கூடங்களை [illegible]

(அடுத்த பக்கம் பார்க்க)

**ராஜம் விலாஸ்**

**கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்**

**உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!**

**80, 100-கெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!**

**ஒருமுறை விஜயம் செய்யுங்கள்.**

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் p.o. திருச்சி.

## கல்வி நீரோடை

1-ம் பக்கத் தொடர்ச்சி

தேர்ச்சி பெற்றிருந்தால் போதும். ஆனால் எல். டி. பட்டம்பெற பி.ஏ. பட்டதாரியாக இருக்கவேண்டும். அத்தகைய கல்லூரிக் கணக்கு வேறிடத்தில் தரப்பட்டுள்ளது. மேலே குறிப்பிட்டக் கணக்கில் திராவிட மாணவர்கள் பார்ப்பன மாணவர்களைவிட 32-மடங்கு அதிகமிருக்கிறார்களா என்று கணக்கிட்டுப் பார்க்கவும். பார்க்கும் பொழுது பார்ப்பன இனத்தின்பங்குபெரும் பகுதியாக உள்ளது என்பது புலப்படும். குறிப்பாகக் கடைசியாக உள்ள என்ஜினியரிங் ஸ்கூல், கமர்சியல்ஸ்கூல், மற்றப்பள்ளிக்கூடங்களில்100-க்கு97-ஆகஉள்ள இனத்தைவிட பார்ப்பனர் எண்ணிக்கையில் அதிகமிருப்பதைக்காணலாம். திராவிட-பார்ப்பன விகிதாச்சாரம் சரியாகமட்டுமல்ல திராவிடர்களுக்கு அதிகமாகவே உள்ள பள்ளிக்கூடமும் ஒன்றிருக்கிறது

சிறுவயதில் அறியாத பருவத்தில் வறுமையால் தாக்கப்பட்டு, பெற்றோரும் பேணுவோருமின்றி வாடும் அனாதைச் சிறுவர்கள்நாட்டிலும் நகரிலும் அனேகர். எலும்புமுறிய வேலை செய்தும் பசியுடன் போராடும்பகற்பொழுதைப்போக்கிவிட்டு, இருளும் குளிரும்மிகுந்த இரவில் தங்களது துன்பத்தைத் தூங்கவைக்கமுயலும்இவ்விருண்ட வாழ்வினர்மீது சிலசமயம் சட்டம் பாய்வதுண்டு. 'இவன் ஒரு தேங்காய்த் தண்டைத் திருடினான்'' ''இவன்திருடியவை ஒருபிஸ்கோத், இரண்டு வெங்காயம்'' என்று குற்றப் பத்திரிக்கை வாசிக்கப்பட்டு, இளம் குற்றவாளிகளெனத் தண்டிக்கப்படும் சிறுவர்களில் சமுகத்தால் பிறப்பிலேயே தண்டிக்கப்பட்ட அனாதைச் சிறுவர்களே அதிகம். இத்தகைய இளம்குற்றவாளிகளைத் திருத்துவதற்காக ஏற்பட்டுள்ள பாஸ்டல் அல்லது சர்டிபைட் பள்ளிக்கூடங்கள் சென்னை மாகாணத்தில் 5-இருக்கின்றன. அவற்றில் அடைத்துவைக்கப்பட்டுள்ள சிறுவர்களில் பார்ப்பனரல்லாதார் **1,838.** பார்ப்பனர் **35.** மக்கள்தொகையில்திராவிடர்பார்ப்பனரைவிட 32-மடங்குஅதிகமென்றாலும் இந்த இருண்ட பள்ளிக்கூடம் ஒன்றில்தான் திராவிடர்களின் தொகை பார்ப்பனரைவிட 53-மடங்கு அதிகம். மகிழ்ச்சியும் பெருமையும் தாங்கமுடியவில்லையல்லவா!!

உழைக்காத இனம், உழைப்பைத்தருகிற இனம் எனநாட்டிலே வாழும்இருப்ரம்பரைகளில்திராவிட இனம் படிப்புவராத இனம் மட்டுமல்ல, குற்றப்பரம்பரைகூட.திராவிடர்இழிவாக நடத்தப்படுகிறார்கள். அதோடு இருட்டறையில் தள்ளப்பட்டுள்ளனர். வீட்டுக்குச் சொந்தக்காரன் வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்டதல்லால் அவனுக்கு திருட்டுப்பட்டமும் கொடுக்கப்படுவதைப்போல நாட்டிலேகளிந்த நிலைமையிலுள்ள திராவிடர்களுக்கு பள்ளிக்கூடங்களில் சரியான விகிதாச்சாரம் கிடையாது, ஆனால் குற்றவாளிகள் பள்ளிக்கூடத்தில் மட்டும் பெரும்பகுதியாகஇருக்கிறது. திராவிடர்களின் இழிவுசமுக அடிப்படையிலிருந்துகிளம்புகிறது. அதனால்தான் சமுக அடிப்படையின்மீது கட்டப்பட்டுள்ள பல்வேறு பகுதிகளிலும் அது வெளிப்படுகிறது. சமுகத்தில் உழைப்பவன் ஆனால் தாழ்ந்தவன், பாடுபடுபவன் ஆனால் பலனுக்கு அருகதையற்றவன். கல்வித்துறையில்படிப்புவராத இனம், குற்றப்பரம்பரை. அரசியலிலும் இதே கதைதான். ''வீரர்கள் ஆனால் விவேகமற்றவர்கள்'' என்று காமராஜ் ''கும்பல்'' மீது வீசப்பட்ட சொற்களுக்கும் ''உழைப்பாளிகள்'' ஆனால் படிப்பு வராத இனம்'' என்பதற்கும்வேற்றுமைகிடையாது. 'நன்றாகஉழைத்தார்கள், ஆனால் ஆச்சாரியாரைப் போல புத்திசாலிகளல்ல'' என்று தூற்றப்பட்டு, காங்கிரசில் குற்றப்பரம்பரையாக்கப்பட்டுள்ள காமராஜ்குழுவினர் இதனைநன்றாகஉணரவேண்டும்.

சமுகத்தில் சமன் செய்யப்படாத ஏற்றத்தாழ்வு சமுகத்தின் சிறுபகுதிகளான அரசியல், அறிவுத்துறைமுதலியவைகளில்வெளிப்படுகிறது. ஒவ்வொரு நாடகத்திற்கும் அடிப்படையான ஒருமுடிவும் கருத்தும், அதற்கான சூழ்நிலையும் நிர்ணயிக்கப்பட்டிருக்கும், அந்த அடிப்படையின்மீதுதான் நாடகத்தின் பலப்பல கட்டங்கள் இயங்குகின்றன. அதைப்போல சமுக நாடகத்திலும் அடிப்படையான இனப்போராட்டம் இருக்கிறது. அந்த இனப்போராட்டத்தின் நிலை பல சீன்களில் வெளிப்படுகிறது. இதுவரைநீங்கள்பார்த்ததுகோர்ட் சீன். அதில் நீதிபதி ஆங்கிலேயன். பெருங்குற்றம் செய்துள்ளசமுகம் சிறு குற்றங்கள் செய்த சிறுவர்களைத்தண்டிக்கிறது!! நீதிபதி தலையசைக்கிறான். விளக்குகள் மங்குகின்றன. இருளில் ''படிப்புவராத—குற்றப்பரம்பரையான திராவிட மாணவர்கள் சோர்ந்து விழுகின்றனர். கோர்ட்சீன் முடிவடைகிறது.

* * *

சென்னை மாகாணத்தில் 3 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அவற்றில் மொத்தம் 67 கல்லூரிகள்இருக்கின்றன. இவற்றிற்காக 1943–44ல் செலவு செய்யப்பட்ட தொகை ரூபா 57,57,836. இந்த 58 லட்சரூபாயும் பொதுமக்களின் பணம் என்பதையும்,பொதுமக்கள் என்று கூறும்பொழுது 100-க்கு 97 பங்கினராகத் திராவிடர்கள் உள்ளனர் என்பதையும் நாம்மறக்கக்கூடாது. கீழே குறிப்பிட்டுள்ள கணக்கில்,மாணவர்களின்தொகை இனவாரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.

| | பார்ப்பன மாணவர் | திராவிட மாணவர் |
|---|---|---|
| இண்டர் மீடியட் | | |
| 1வது வகுப்ப | 3199 | 3601 |
| 2வது வகுப்பு | 2621 | 2537 |
| பி.ஏ. அல்லது பி.ஏ. ஹானர்ஸ் | | |
| 3வது வகுப்பு | 1789 | 1348 |
| 4வது வகுப்பு | 1515 | 1263 |
| 5வது வகுப்பு | 241 | 117 |
| போஸ்ட் கிராஜுவேட் | 103 | 62 |
| மொத்தம் | 9 468 | 8,928 |

(போஸ்ட் கிராஜுவேட் என்பது பி. ஏ. படித்த மாணவன் எம்.ஏ. பட்டம் பெற படிப்பதாகும்.)

கல்லூரி என்பது கல்வித்துறையில்தலைசிறந்தஇடமாகும்.பத்தாவதுவரை படிக்கும்மாணவனின் உள்ளம் அதுவரை பக்குவப்படுத்தப்படுகிறது. கல்லூரியில்தான் எதையும் ஆராய்ந்துபார்க்கும்அறிவுபுகட்டப்படுகிறது. பல்கலைகளும், விஞ்ஞானமும்உயர்ந்தநிலையில்தழைக்குமிடமுமாகும். கல்வியெனும் கரும்பை வளர்க்கும் இடங்களாக பள்ளிக்கூடங்களும், கரும்பின் சாற்றைப் பிழிந்தெடுக்கு மிடங்களாகக்கல்லூரிகளும்இருக்கின்றன. தற்பொழுதுள்ள கல்விப் போக்கில் குறைகளிருந்தபோதிலும், கல்லூரிப்படிப்பு மக்களனைவருக்கும் எட்டாதத் தொலைவிலிருந்தாலும், அதனுடைய முக்யத்துவத்தை முற்போக்குள்ள எந்தநாடும், மறுத்ததில்லை, மறுக்காது. அத்தகைய வசதியின்மையும் துறைபாடுகளும் சமுக—அரசியல் பிழைகளேயன்றி கல்லூரிகளின் குற்றமல்ல. பல்கலைக்கழகங்களும்,கல்லூரிகளும் உல்லாச வாழ்வினரின் ஓய்வு இடங்கள்போலக் காணப்பட்டாலும், அவைகளின்றி நாடும் ஏடும் வளம் பெற. இயந்திர வளர்ச்சி, வேலையில்லாத் திண்டாட்டத்தை அதிகரிப்பதோடு, கைத்தொழில்புரியும் அன்றாடக் கூலிக்காரர்களின் பிழைப்பையும் கெடுத்துவிட்டது. அது உண்மை, இந்தத்துயரை நீக்க வழிஎன்ன? வார்தாத் திட்டமும் காந்தியமும் இயந்திரத்தை உதறித்தள்ளு என்று கூறும். அதுதவறு. இயந்திர வளர்ச்சி ஏழ்மைக்குகாரணமல்ல.அந்தஇயந்திரங்களைத் தனிப்பட்ட சொத்தாக்கிக்கொண்டு, உழைப்போரின் பலனை உறிஞ்சுகிற முதலாளித்தனமே வறுமைக்குக் காரணம். எனவே இயந்திரசாலைகளைப் பொதுவாக்கி மக்களுக்கு இன்பங்கூட்டுவதைப்போல, கல்லூரிகளில் ஒரு சிறுபான்மைக் கூட்டம் மாத்திரம் ஆதிக்கம் செலுத்துவதைஒழித்து அனைவருக்கும் பயன்படும் அறிவின் ஆய்வுக்கூடமாக அதை ஆக்கவேண்டும்.

வரிசெலுத்துவோரில் நாம் அதிகம். கல்லூரிகளுக்குச் செலவிடப்படும் 58-லட்ச ரூபாயில் 56-லட்ச ரூபாய் திராவிடர்களால் செலுத்தப்பட்ட வரிப்பணம். இவ்வளவுதொகையையும் உண்டுவாழ்கிற கல்லூரிகளில் நுழைந்து அங்குபடிக்கும் மாணவர்கள் தொகையைப்பார்த்தால், 100க்கு 3ஆகஉள்ளஇனம் 100க்கு 97ஆகஉள்ள இனத்தைப்பின்னுக்குத் தள்ளுகிறது. ஒருவனின்வயற்கரை மற்றவனின்வயலில் ஒருஅங்குலம்கூட நுழைந்துவிட்டால் அதைத் தண்டிக்க சட்டதிட்டங்கள்நாட்டில்இருக்கின்றன.இங்கோ சிறுபான்மையினர் கல்லூரிகளைச் சொந்த வீடுகள்போல ஆட்சிபுரிகின்றனர்.படக்கலையை வரவேற்ற நெஞ்சு பகுத்தறிவுக் கொவ்வாத படங்களைப் பார்த்ததும் 'படக்கலையாம் சனியொழிந்தால் போதும்'' என நினைப்பதுபோல, கல்லூரிகள் கங்காபுத்திரர்களின் கையில் சிக்கியதைப் பார்க்கும் போது, பூதேவர் பட்டத்தைப் பெற்றவன் பி. ஏ. பட்டத்தைப் பெற்றவுடன் அவனுடையும் உருவத்தைக்கண்ணுறும்பொழுது, கல்லூரிகளின்மீது நமக்கு அடங்காத கோபந்தான் உண்டாகிறது. இதுவரை நாமடைந்த துன்பங்கள் இரட்டிக்கின்றன.

முன்னாள் அரசர்கள் சதுர்வேதிமங்கலங்களை அவர்களுக்குத் தானம் செய்தனர், இப்பொழுதுள்ள அரசியலார் சர்வகலாசாலைகளை அவர்களின் உரிமையிடங்களாக முத்திரை பொறித்துவிட்டனர். நிலங்களில் மிராசுதார் உழவர்களின் உணவைப் பறிக்கிறான். கல்வித்துறையில் கங்காபுத்திரர்கல்விச்சாலைகளைத் தங்கள்வசமாக்கிக் கொண்டு மக்களின் உணர்வைப் பறிக்கின்றனர். படிப்பின்காரணமாக, பட்டதாரிகளான கூட்டம் அரசியல் மேடையைத்தனதாக்கிக் கொண்டது. பத்திரிக்கைப் பலத்தைப்பெற்றது. தன்னினத்திற்கு வேண்டிய வசதிகளைப் பெற ஆங்கிலேயருடன் வாதாடிஉரிமை பெற்றது. வாழ்க்கை வசதிகளைப்பெற்றவுடன், அரசியலில் ஆங்கிலேயனுக்கு மிரட்சியை உண்டுபண்ணும் வண்ணம் பலத்தை யடைந்ததும் இப்பொழுது கல்லூரிகளை உண்டாக்கும் திறமையை அடைந்திருக்கிறது. இயந்திர வசதிபெற்ற முதலாளி பல்லரை ஏழைகளாக்கி, இயந்திரத்தினால் நொடிப்பொழுதில் பெரும் பலனை அடைவதுபோல, கல்வி வசதிபெற்ற குருமார்கூட்டம்பெரும்பான்மையான மக்கள் கூட்டத்தை எளிதில் அடக்கமுடிகிறது.

பொது மக்களுக்காக ஏற்பட்டுள்ள கல்லூரிகளில் இத்தகைய இழிநிலை. முதல்வகுப்பில் பார்ப்பன மாணவர்களைவிட திராவிட மாணவர்கள் சற்று அதிகம்.இரண்டாவது வகுப்பில் பார்ப்பனமாணவர் அதிகம். மேல்வகுப்பில் பார்ப்பனர் தொகையே உயர்கிறது. ஐந்தாவது வகுப்பில் பார்ப்பனர் நம்மைவிட இரண்டு மடங்குக்கு அதிகம். இந்தக்கணக்கில் தாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கையை மட்டும் தனியாகப் பார்த்தால் விம்முகிற நெஞ்சின் வேதனை அதிகரிக்கும். தாழ்த்தப்பட்டோரின் தொகை,

| | |
|---|---|
| 1-வது வகுப்பில் | 140 |
| 2-வது வகுப்பில் | 103 |
| 3-வது வகுப்பில் | 52 |
| 4-வது வகுப்பில் | 31 |
| 5-வது வகுப்பில் | — |
| போஸ்ட் கிராஜுவெட் | — |
| மொத்தம் | 326 |

முன் கொடுக்கப்பட்டுள்ள கணக்குடன்ஒப்பிட்டுப்பாருங்கள். 100-க்கு 3-உள்ள பார்ப்பனர் எண்ணிக்கையுடன், 100-க்கு 16 உள்ளதாழ்த்தப்பட்டோரின் எண்ணிக்கையை சேர்த்துப் பார்க்கக்கூடயோக்யதைஅற்றிருக்கிறது.81 லட்சம் தாழ்த்தப்பட்டோரில் கல்லூரிகளில்படிப்பவர்கள் 326-பேர்! அதிலும்வேடிக்கை பி ஏ க்குசெல்லுபவர்கள் 83-பேர். போஸ்ட்கிராஜுவேட் வகுப்புகளில் 81-லட்சம் பேர்கள்கொண்ட பெருங்குடியினரில் ஒருவர்கூட இல்லை.

உயர்தரக்கல்வியில் நம் நாட்டில் மிகச் சிறப்பு வாய்ந்ததும்,விரும்பப்படுவதும் இன்ஜினியரிங், மெடிகல் போன்ற உத்தியோகத்திற்கு பக்குவப்படுத்தும்தொழில்கல்லூரிகளும், குறிப்பிட்டத் துறையில் ஒருவனைப் பழக்குகிற சிறப்புக்கல்லூரிகளுமாகும். 1943—44 அறிக்கைப்படி சென்னை மாகாணத்தில் இவை 15–கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றிற்காகச் செலவிடப்பட்ட தொகை ரூ. 19,18,340 ஆகும்.அவைகளில்படிக்கும்மாணவர்களின் தொகை இனவாரியாகக் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| | பார்ப்பன மாணவர் | திராவிட மாணவர் |
|---|---|---|
| சட்டக் கல்லூரி | 155 | 202 |
| மெடிகல் ,, | 426 | 676 |
| ஆசிரியர் ,, | 182 | 88 |

(6-ம் பக்கம் பார்க்க)

சென்ற வாரத் தொடர்ச்சி:

# ★ ரங்கோன் ராதா! ★

செளமியன்.

பேயைக் கண்டவர்கள் கிடையாது, ஆனால் அதனைக் கண்டு, அதன் குணங்களைத்தெரிந்துகொண்டவர்களைப்போல ஜனங்கள்பேசிக்கொள்கிறார்கள். பேயின் உருவம் தெரியாது என்றும், அது மனிதர்களைப் பிடித்துக்கொண்டால், அவர்கள் செய்யும்சேஷ்டைகளின் மூலம், பேயின்போக்கு தெரிந்துகொள்ளமுடியுமென்றும் பேசுகிறார்கள். இந்தப் பைத்தியக்காரத்தனமான எண்ணம், எவ்வளவு விபரீதமான நடவடிக்கைகளுக்கு இடம் தருகிறது. என்னைக்கொட்டி வேதனை கொடுத்த தேளை, அடிக்க, நான் என் அப்பாவின் தடியை எடுத்தேன். எனக்குப் பேய் பிடித்துக் கொண்டிருப்பதாக நம்பியதால், நான் தடியை எடுத்ததும், தங்களுக்கு ஆபத்து வரும் என்று பயந்து, என் தகப்பனாரும், புருஷரும்ஓடினார்கள்- என்னால் சிரிப்பைத்தாங்கமுடியவில்லை. மகா சூரர்கள், வீரர்கள் இந்த ஆண்பிள்ளைகள்! எதிலே? பெண்களைமிரட்டுகிற விஷயத்திலே! நான் என்ன பெண்பிள்ளையா? எனக்கென்ன பயம்? என்று பெருமையாகப் பேசுவார்கள். பெண் என்றால், பயங்காளி, ஆண்களேதான் தைரியசாலிகள் என்று எப்படியோ ஒரு தப்பான எண்ணத்தைநாட்டிலே பரப்பிவிட்டார்கள். இரண்டு ஆடவர்கள் ஓடினார்கள், நான் கையிலே தடியை எடுத்ததும்! அவ்வளவு பயம்! பேய் என்ன செய்துவிடுமோ, என்ற பயம்.

தேளை அடித்துவிட்டு வெளியேவந்து, அப்பாவைக் கூப்பிட்டேன். அவர், என் வார்த்தையிலே நம்பிக்கைவைத்து உள்ளேவர நெடுநேரம்பிடித்தது. இதற்குள் வீட்டுவாசற்படி அருகே ஒரு சிறு கூட்டம். வழக்கப்படி, என் கணவருக்கு உபசார மொழிகள். அவரும், வழக்கமான நடிப்பைச்செய்தார். தேளைக்காட்டினேன், அப்பாவுக்கு. அப்போதுதான் நம்பினார், உண்மையில் என்னைத் தேள் கொட்டியதனால்தான், அலறினேன் என்று. ஏதோ மருந்து தடவினார்கள். அன்றையப் பொழுதை ஒருவாறு கழித்தேன். மறுதினம், நான் என்ன சொல்லியும் கேட்காமல், என்தகப்பனார், நிர்ப்பந்தப்படுத்தி, என்னை ஒரு கிராமத்துக்கு அழைத்துச்சென்றார், பேய் ஓட்டும் இடமாம் அது. அங்கு போய், ஒரு பெரிய குடிசையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, நானும், என் அப்பாவும் எங்களுக்கு உதவியாகவந்த வேலைக்காரியுடன் தங்கினோம். கிராமம்,சிறியஅளவு ஆனால் பச்சைப்பசேல்என்று இருக்கும். எந்தப்பக்கம்திரும்பிப்பார்த்தாலும். அழகான தோப்புகள். சுற்றிப்பார்க்குமிடங்களினெல்லாம், விதவிதமான பட்சிகள். இந்தக் கிராமத்திலே, தங்கியிருந்த ஒரு பக்கிரி, பேயோட்டுவதில்நிபுணன்என்று அந்தப்பக்கத்து வதந்தி. அதனால், என் தகப்பனார் என்னை அங்கு அழைத்துவந்தார். எனக்கு ஒரு துளியும் விருப்பம் கிடையாது, அங்கு போக. என் கணவரிடம், நான் புறப்படுவதற்குமுன்பு, தனியாகச் சந்தித்து, என் மனதைத் திறந்து பேசினேன். "எப்படியோ நமது இன்ப வாழ்வு கெட்டுவிட்டது. என் சவகாசம் உங்களுக்குப் பிடிக்கவில்லை. கல்லென்றாலும் கணவன்தான், புல்லென்றாலும் புருஷன்தான், ஆனால் நீங்கள் கல்லாகவோ, புல்லாகவோ இல்லை, என் தலைக்குப் பாறையாக இருக்கிறீர், ஆகையால், என் மனமும் முறிந்துவிட்டது. தங்கத்தைக்கலியாணம்செய்து கொள்ளுங்கள், நான் தடை செய்யவில்லை என்று உம்மிடம் கூறினேனே, அன்றுஇரவு, அதோடு என் அல்லல் தீர்ந்துவிட்டது என்றுதான் நான் மனமாறநம்பினேன். அன்று இரவு, நீங்களும், என் துக்கத்தை எல்லாம் துடைத்துவிடுவதுபோலவே நடந்துகொண்டீர். ஆனந்தமாகக் கழிந்தது அந்த இரவு. என் கடைசி இன்ப இரவு அதுதான். இனிஅத்தகையஇரவுகிடைக்காது. மறுதினமே உங்கள் மனம் மாறிவிட்டது. இனிநானும், நம்பிக்கையை இழந்துவிட்டேன். கட்டினதாலி ஒன்றுதான் இனி நாம் கணவன் மனைவி என்பதைக்காட்டும் அறிகுறியாக இருக்கும். உம்மை நான் இழந்துவிட்டேன். இனி மறுபடியும் பெறமுடியாது. பெறவும் முயற்சிக்கமாட்டேன். உம்மைநான் வேண்டிக்கொள்வதெல்லாம், ஒரே ஒரு விஷயமாகத்தான்.உங்கள்காலில்விழுந்து கெஞ்சிக்கேட்டுக்கொள்கிறேன், என்னை அந்தப்பேயோட்டும் இடத்துக்கு அனுப்பாதீர்கள். அங்கே எத்தனைபுண்யகோடிகள் இருப்பார்களோ! என்னென்னபழி பிறக்குமோ, என்றபயம் என்னைக்கொல்கிறது. என்னகாரணமோ தெரியவில்லை, ரங்கத்தை அவள் புருஷன் கைவிட்டார் என்று மட்டும் உலகம்கூறட்டும்; வேண்டுமானால், ரங்கத்தைப்பேய்பிடித்துக் கொண்டதால், அவள் கணவன், இரண்டாம் கலியாணம் செய்துகொண்டான், ரங்கம், மாட்டுக்கொட்டகையிலே கிடக்கிறாள் என்று பேசட்டும். ரங்கம் கெட்டுவிட்டாள், என்று பேசுவதற்குமட்டும் இடம் தரவேண்டாம். குடிவெறியிலே உளறினான் அந்தக் கோணல் சேட்டைக்காரன், பூஜாரி புண்யகோடி. அதற்கு எனக்கு விபசாரிப்பட்டம் சூட்டினீர். இப்போது, என்னை வேறோர் பேயோட்டியிடம், போகச் செய்கிறீர், சிகிச்சை பெற. இங்கு போவதால், என்மீது அபவாதம் ஏற்பட்டால், என் கதி என்ன ஆவது. விபசாரி என்று உலகம் தூற்றுவதற்குமா நான் இடமளிக்க வேண்டும். என்னைப்பிடித்த பேய் என்னை என்ன வேண்டுமானாலும் செய்யட்டும், அதை ஓட்டுவதற்கு முயற்சி எடுப்பதாகக்கூறி, என், மானத்தை ஓட்டிவிடாதீர். தயவு செய்யுங்கள். என்னிடம், இனிநீர், பேச வேண்டாம், அன்பு காட்டவேண்டாம், தோட்டத்திலேயே கிடக்கிறேன். நான் ஏதேனும் தொல்லைதருவேன் என்று பயம்ஏற்பட்டால், என்னைக்கட்டிப் போடுங்கள், ஆனால், விபசாரி என்ற பழி பிறக்கும்படியான மார்க்கத்திலே என்னைத் தூரத்தாதீர். பாவி புண்யகோடி, நான் மயக்கமுற்றுக்கிடந்த நேரத்தில், என் மச்சம் முதலிய அடையாளத்தைக் கூடக் கண்டு கொள்ளவும், கேவலமாகப் பிறகுபேசவும் துணிந்தான். இப்போது நீங்களும் வரமுடியாது என்றுகூறுகிறீர். என்னை என் தகப்பனாருடன் அனுப்பிவைக்கிறீர், அங்கே என்னென்னபழி பிறக்குமோ, என்றே நான் பயப்படுகிறேன். வேண்டாம், நாம் சிலகாலமாக இருந்துவந்த இலட்சணத்தின் பேரால் உம்மைக் கேட்கிறேன் என்னை இங்கேயே இருக்கவிடுங்கள்'' என்று நான் கண்ணீரும் கம்பலையுமாக இருந்துகொண்டு கேட்டேன். உன் அப்பாவின் மனம் இளகவில்லை. போகமுடியாது என்று பிடிவாதம் செய்துபார்த்தேன், பிடிவாதம் செய்யச் செய்ய, பேயின் சேஷ்டை அதிகமாகிவிட்டது என்றே என் அப்பாவும் ஊராரும் நம்பினார்கள். ஆகவே, பலாத்காரமாகஎன்னை அழைத்துக்கொண்டு போனார்கள், அந்தக் கிராமத்துக்கு. என் முயற்சிகள் தோற்றுவிட்டன. என்னசெய்வதுஇனி. எப்படியாவது, நான் தொலையவேண்டும் என்பதுதான் உன் அப்பாவின் எண்ணம். நானும் தற்கொலை செய்து கொள்வது என்று ஏதேதோ யோசித்தேன். மகனே! எனக்கு மனம் வரவில்லை, சாக. என்னை, அவரே கொல்லட்டும், நானாக என் சாகவேண்டும் என்று எண்ணினேன். ஆடுகூடத் தானாக வெட்டுபவனிடம் போய் நிற்பதில்லையே! அதனுடைய சக்திக்குத் தகுந்தபடி, தப்பித்துக்கொள்ளக் கொஞ்சம் போராடித்தானே பார்க்கிறது. என்னைக் கொட்டிய தேள், சுலபத்திலே கொல்லப்படுவதற்கு இடந்தரவில்லையே, ஒளியவும், நழுவவும் எவ்வளவு முயற்சி செய்யவேண்டுமோ அவ்வளவும் செய்து பார்த்துவிட்டதே. கொடுமைக்கு ஆளான நான்மட்டும், என், அவருக்கு வாழ்க்கைப் பாதை அமைத்துக் கொடுப்பதற்காகச்,சாகவேண்டும்.பேராசைக்காரர், கொடிய சுபாவக்காரர்,வஞ்சகர் உன் அப்பா, என் அவர் இன்னம் ஒருபடி முன்னேறி, கொலைகாரராகக் கூடாது! என்னைக் கொல்லட்டும், நானாகச் சாகக்கூடாது. நான் வாழத்தான் வேண்டும், அதுவேதனை நிரம்பியவாழ்க்கையாக இருந்தாலும்பரவாயில்லை, நான் உயிரோடுஉலாவுவதே, அவருக்கும்அந்த ஆள்விழுங்கி தங்கத்துக்கும் வேதனை தரும் அல்லவா! அதுபோதும்! என்று எண்ணினேன். எனக்குச் சாகத் துணிவு இல்லை என்பதல்ல, இஷ்டம் இல்லை. உயிரோடு இருந்து போராடவேண்டும் என்று தோன்றிவிட்டது. இனி அவர் என் கணவரல்ல, என்னை வஞ்சித்து வாழ விரும்புபவர்,இனி அவருடையவஞ்சனையுடன் போராடி, ஒரு பெண்ணை அவ்வளவு எளிதாகத் தோற்கடிக்க முடியாது என்பதைக் காட்டவேண்டும் என்று உறுதி பிறந்தது. ஒரே ஒரு விஷயத்தில்மட்டுமேஎனக்குப்பயம், அதாவது என்மீது பழி எதும் ஏற்படாமலிருக்க வேண்டுமே என்பதுதான். தவறிநடந்துவிட்டாள், வழுக்கிவிட்டாள், என்ற வதந்தியைப்போல, பெண்களைநாசமாக்கக்கூடிய கருவி வேறு இல்லையே ஊர் முழுதுமல்லவா, எதிரியாகிவிடும் அப்போது. அந்த ஒரு பழிமட்டுமே வராதபடி பாதுகாத்துக்கொண்டு, உன் தகப்பனாரை நேருக்கு நேர்தைரியமாகநின்று சந்தித்து, "உன்னுடைய அதிகாரத்துக்கும் அளவு உண்டு, உன் கொடுமையைச் சகித்துக்கொண்டே இருந்தாகவேண்டும் என்று ஒன்றும் சட்டம் இல்லை" என்று கூறவேண்டும் என்றுதோன்றிற்று. என் மீது விபசாரிப் பட்டம்சூட்டிவிட்டால், எனக்கு அந்தத் தைரியம் வராது, நெஞ்சிலே களங்கமில்லாததால் ஒரு வேளை தைரியம் வந்தாலும், ஊரார் என்னையே தூற்றுவார்கள். பெண், விபசாரியாகிவிட்டாள் என்ற பேச்சைக் கேட்டமாத்திரத்திலேஆண்கள்,ஆளுக்கொருகல்லைக் கையிலே தூக்கிக் கொள்வார்கள். அந்தப் பெண்ணின் வீட்டுமக்கள், உற்றார் உறவினர் இவர்கள் மட்டுமா, வழியிலே வருகிறவன் போகிறவன்கூட அல்லவா வசை புராணம் பாடுவான் தைரியமாக. எல்லோரும் சேர்ந்து அந்தப் பெண்ணின் உயிரை வாங்குவார்களே தவிர, அவளுடைய விபசாரம் சாத்யமானது ஒரு ஆணினால்தானே என்று யோசிக்கமாட்டார்கள், யோசித்தாலும், அவனிடம் கொஞ்சம் அச்சத்தோடுதான் பேசுகிறார்கள். அவனேகூட என்ன சொல்கிறான், "என்னை என்னடா மிரட்டுகிறீர்கள்? போய், அவளைக் கேளுங்கள். உங்கள் வீட்டிலே உள்ளவளை அடக்கிவைக்காமல் என்னிடம் வம்புசெய்தால்என்ன அர்த்தம். அவள் இஷ்டப்பட்டாள். நான் என்ன சன்யாசியா! போடா, போ'' என்று கூறிவிடுகிறான்; அவனும் பெண்மீதேதான் குற்றம் சாட்டுகிறான். ஆகையால், விபச்சாரி என்ற பழிமட்டும் என் மீது தாக்காதபடி பாதுகாப்பு ஏற்பட்டுவிட்டால்போதும் என்பதிலேதான் அவ்வளவு கவலைப்பட்டேன். அன்புக்குஅன்பு திரும்பக்கிடைக்கும் என்று காத்திருந்து பார்த்தேன். உன் அப்பா, என்னைமிருகமாக்கினார். அவர்மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள எண்ணினேன். நான் என்ன வேண்டுமானாலும்செய்யலாம்.நான்தான் பேய்பிடித்தவளாயிற்றே! ஊரார், என்னையா கோபிப்பார்கள்? பேயைத்தானே திட்டுவார்கள். சாதாரணமாக மற்றப் பெண்கள் பெறமுடியாத உரிமை எனக்குப் "பேய்"மூலமாகக்கிடைக்கிறது. ஏன் நான் அந்தஉரிமையைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது. நான் விரும்பினால், திடீரென்று பாய்ந்துசென்று உன் அப்பாவின் தலைமீது தண்ணீர்ச் செம்பை வீசமுடியும். அவர்ஐயோ!ஐயோ! என்று அலறும் சங்கீதத்துக்கு ஏற்றபடி ஆனந்தத்தாண்டவமாட முடியும்! என்னசெய்வார் அவர்? குய்யோமுறையோ, என்று கூவுவார், மக்கள்கூடுவர், வாயில் வந்தபடி அவர்களையும் ஏசலாம். யார்என்ன செய்ய முடியும்? நான்தான் பேய்பிடித்தவளாயிற்றே. திடீரென்று தங்கத்தின் காதைக் கடிக்கலாம், உன் அப்பாவின் காலை ஒடிக்கலாம், செய்துவைத்திருக்கும் சாப்பாட்டைக்குப்பையிலேஎடுத்து வீசலாம், குப்பைமேட்டின்மீது வீட்டுச்சாமான்களை எறியலாம், கட்டிலை உடைக்கலாம், துணிகளைக் கொளுத்தலாம்; நடுஇரவிலே நல்ல தூக்கத்திலே உன் அப்பா இருக்கும்போது பயங்கரமான கூச்சலிடலாம், என்னவேண்டுமானாலும் செய்யலாம். என் வாழ்வைப் பாழ்படுத்திய உன் அப்பாவின்வாழ்விலே ஒரு நிமிஷநேரம்கூட நிம்மதி இல்லாதபடி செய்யலாம். என்ன செய்தாலும், ஊரார் என்னைத் தூற்றமாட்டார்கள். "ரங்கம் பாவம் படாதபாடு படுகிறாள்! எவ்வளவு நல்லபெண். பாழாய்ப்போன பேய் பிடித்துக்கொண்டு அவளை ஆட்டிப்படைக்கிறது என்று பேசுவார்களே தவிர, என்மீது கோபிக்கமாட்டார்கள். பேயைச்சாக்காகவைத்துக்கொண்டுஉன் அப்பாவின்மீதுதான் படை எடுக்கமுடியும். மிஞ்சிப்போனால்,கைகாலைக்கட்டிப் போடுவார்கள். போடட்டுமே! இரண்டு நாட்கள்சும்மா இருப்பது.பிறகு தானாக கட்டுகளை அவிழ்த்து விட்டுவிடுவார்கள், பிறகு ஆரம்பிக்கிறது பேயாட்டத்தை! இதுபோல எண்ணினேன்; என்னுடைய நிலையிலேயேகூட இன்பம் பிறந்தது. சொத்துக்கு ஆசைப்பட்டு, தங்கத்தைக் கலியாணம்செய்துகொள்ளத் தந்திரமான திட்டமிட்டு, அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக்கொள்ள, நான் ஒருவள் தடையாக இருக்கிறேன் என்று அறிந்து என்னைப் பேய் பிடித்துக்கொண்டதாகக் கூறினார், உன் அப்பா; அன்பினால் அவருடைய மனதை என் பக்கம் திருப்ப முயன்றேன், முடியவில்லை. இனி எந்தப் பேயின்பேரில் சாக்கிட்டு அந்தப் பேராசைக்காரர், என்னைக் கொடுமை செய்தாரோ, அந்தப்பேயின் சாக்கை வைத்துக்கொண்டே நான் அவருடைய வாழ்வைக்கொட்டிக் கொட்டி வேதனையை உண்டாக்குவது என்றுதீர்மானித்தேன். மகனே! உன் தாய் எப்படி இவ்வளவு கல்நெஞ்சு கொண்டாள் என்று யோசிக்கிறாயா? அப்படிநான்எண்ணினது தவறு என்று கூறுகிறாயா? என் மீது தவறு இல்லையடா கண்ணு!

ஒருநாள், ரங்கோனில், நான்சமையற்கட்டில் இருந்தபோது, ராதா, ஆ! என்று அலறும் சத்தம்கேட்டு, 'என்னடி கண்ணு!" என்று கேட்டுக்கொண்டே கூடத்துக்கு வந்தேன். ராதா, உதட்டிலே ரத்தம் இருக்கக்கண்டேன். "என்னடியம்மா?" என்று கேட்டேன். "அம்மா! வேடிக்கைக்காக எடுத்து விளையாடிக்கொண்டிருந்தேன், சீதாவை. அந்தத் துஷ்டை பாரம்மா, என் உதட்டைக் கடித்துவிட்டாள்" என்றாள்ராதா. சீதா, ஒருபெண்ணல்ல, கிளி. ராதா அன்புடன் வளர்த்துவந்த கிளியை, அவள் ஏதோ கொஞ்சம் சீண்டிவிட்டாள், அதற்குக்கிளி, அவள் உதட்டைக் கடித்துத்தண்டனைதந்தது. வேடிக்கைகூட கொஞ்சம் வேதனையை உண்டாக்கினால் பச்சைக்கிளிக்கும் பதைபதைப்பு வருகிறது. என்னிடம் உன் அப்பாவிளையாடவில்லை. என் வாழ்வைச் சிதைக்கும்விளையாட்டிலே ஈடுபட்டார். கொடுமை செய்தார், கேவலம், பணத்தாசைபிடித்து. எனக்குக்கோபமும், பழிவாங்க வேண்டுமென்றஉணர்ச்சியும் வாராதா? யாருக்கும் ஏற்படக்கூடிய எண்ணந்தான் அது. ஆகவே நான்கொண்ட எண்ணம் தவறு அல்ல. என்னை அவர் நசுக்கிவிட்டுத், தான் சுகமாக வாழ்வதற்காக என்னைக் கேவலப்படுத்தத்துணிந்தார். ஏன் நான் அவருடையசுகத்தைக்கெடுக்கக்கூடாது? அதிலும் எனக்குப்பேயின் தயவினால் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம்வேறு துணையாகஇருக்கிறது. என் வாழ்வுக்குஆனந்தம்

(6-ம் பக்கம் பார்க்க)

ஜெயலட்சுமி — சுப்ரமணியன்

## திருமணம்

எனது மகள் திரு. ஜெயலட்சுமிக்கும், காஞ்சிபுரம் பூ. தங்கவேலு முதலியாரின் குமாரன் சுப்ரமணியனுக்கும், 8—7—46 திங்கள் காலை 9-30 மணிக்கு தோழர் C. D. நடராஜன், M.A., B,L., அவர்கள் தலைமையில் காஞ்சிபுரம், வைகுண்ட பெருமாள் கோயில் தெரு 31-ம் நெ. இல்லத்தில் திருமணம் நடைபெறும். அது சமயம் தோழர்கள் C. N. அண்ணாதுரை, M.A., நெடுஞ்செழியன், M.A., P. ஜீவானந்தம் முதலியவர்கள் 'திருமணம்' எனும் பொருள்பற்றி சொற்பொழிவு ஆற்றுவார்கள். இதனையே அழைப்பாகக்கொண்டு தோழர்கள் வரவேண்டுகிறேன். வணக்கம்.

அன்புள்ள:

காஞ்சி. கலியாணசுந்தரன்,

ஆசிரியர் "தொழிலாளர் மித்திரன்"

# திராவிட நாடு

காஞ்சி] 30—6—46 [ஞாயிறு


## தறுதலை ஆட்டம்

●

தென் ஆப்பிரிக்காவிலே உள்ள பரங்கிகளின் மண்டைப்புழு, மிக வேகமாக அவர்களை ஆட்டிப் படைக்கிறது. தென் ஆப்பிரிக்க சர்க்காரின் சட்டத்தைஅங்குள்ள இந்தியமக்கள் பெரும்பாலும் தமிழர்—மீறுகின்றனர்— அமைதியான முறையில். அவர்கள் மீது சட்டம் பாயட்டும். இந்த வெள்ளைக்கும் பல் ஏன் பாயவேண்டும்? சட்டப்படி ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளாமல் ஸ்மட்ஸ் துரை இருந்தபோதே, தென் ஆப்பிரிக்க வெள்ளைக்காரர்கள், நூறுபேர்கூடி அமைதியாகச் சட்டமறுப்பு நடத்துபவர்களைத் தூற்றியும் தாக்கியும், கூடாரங்களைக் கிழித்தும் கொளுத்தியும், தாய்மார்களை அவமதித்தும் தறுதலை ஆட்டம் ஆடியிருக்கிறார்கள். ஸ்மட்ஸ் கையாலாகாதவர் என்று தீர்மானித்துவிட்டு இந்தத்துரைமார்கள் கிளம்பிவிட்டார்களா? காலித்தனத்திலே தங்களுக்கு முதல்தாம்பூலம் தரவேண்டும் என்று ஆசைப்படுகிறார்களா? ஏன் இந்த ஆணவப்பிடித்தசெயல்? இதனால் "இந்தியரின்" மனம்புண்படும் என்பது மட்டுமல்ல, உலகிலே நாகரிகத்தையும் நற்பண்பையும் மதிக்கும் எந்த அறிஞரும், இந்த வெள்ளைநிறத்திமிரைக் கண்டிப்பார் என்பது திண்ணம். கடல் கடந்து சென்று கண்காணா இடத்திலே வசித்துவரும் நம் தமிழ்மக்களைக் கேவலமாக நடத்திய தென் ஆப்பிரிக்கப் பரங்கியரின் திமிர் அடங்க நெடுநாட்கள் பிடிக்காது. இந்த ஆணவச்சேட்டையின்மூலம் தென் ஆப்பிரிக்காவிலுள்ள தமிழ் மக்களை அடக்கிவிடலாம் என்று நம்பினால்,அந்தவெள்ளை நிறத்திமிர் பிடித்தவர்கள், ஏமாறப் போவது நிச்சயம். ஸ்மட்ஸ்துரை, கொஞ்ச நஞ்சம் மிச்சமாக இருக்கும் நன்மதிப்பையாவது காப்பாற்றிக்கொள்ள விரும்பினால், உடனே இந்த உதவாக்கரை வெள்ளையரின் சேஷ்டையைக் கண்டித்துத் தண்டிக்கவேண்டும். இல்லையேல்,அவர்களின் செயலுக்கு, ஸ்மட்ஸ் துரையும் உடந்தைதான் என்று உலகு தீர்ப்பளிக்கும் என்பது உறுதி. உலகில் அநிதியை ஒழிக்கவும்,ஒருநாட்டுக்கும் மற்றோர்நாட்டுக்கும்பூசல் ஏற்படக்கூடிய காரணம் இருந்தால் அதனை நீக்கவும் நிறுவப்பட்டுள்ள, ஐக்கிய நாடுகள் மன்றத்திலே, தென் ஆப்பிரிக்க சர்க்கார், இந்தியர்களை இழிவுபடுத்துவதைப் பற்றிய தகவலை, சர். A. இராமசாமிமுதலியார், இந்தியசர்க்கார் சார்பிலே தாக்கல் செய்து விட்டார். தென்ஆப்பிரிக்க சர்க்காரின் போக்கு அங்கு விசாரிக்கப்படும் விரைவில். அந்த சபையின் யோக்யதை என்னஎன்பதை உலகுகண்டுகொள்ள அரிய வாய்ப்பு! பார்ப்போம், "இலட்சிய சிருஷ்டி" என்று ராஜதந்திரிகள் புகழ்ந்து வாழ்த்திய சபை, என்ன செய்கிறது என்று. சட்டமறுப்புநடந்து வருகிறது. தென் ஆப்பிரிக்காவில் டாக்டர் மோகாம்புரி நாயகர் உட்பட, பல தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். தண்டனைதரப்பட்டுவருகிறது. துரைமார்களின் துடுக்குத்தனத்தை அடக்க தென் ஆப்பிரிக்க சர்க்கார் முன்வரக்காணோம். இந்த நிலையில், இலங்கையிலேயும் தமிழர்கள்தவிக்கிறார்கள்.

பெயர், சேனநாயகர், ஆகவே வீரமாகப் பேசியாக வேண்டும் என்று எண்ணிவிட்டார் போலும் இலங்கை மந்திரியார், தமிழர்நடத்தும் நியாயமான கிளர்ச்சியைக் கண்டு, தமதுபோக்கை மாற்றிக்கொள்ளாததுடன், தமிழரைக் கிள்ளுக்கீரைஎன்றுஎண்ணிக்கொண்டு அவர்கள் நடத்தும் கிளர்ச்சியால் ஒன்றும்நேரிட்டுவிடாதுஎன்று துந்துபிநாதம் செய்கிறார். சோறும் துணியும் தரவேண்டுமென்று, இங்கே காவடிதூக்கிய காலம் போய், இப்போது சேனநாயகர்கள், தமிழரைமிரட்டி அடக்கவும், சட்டத்தால் தாக்கவும் துணிந்துவிட்டனர். இலங்கை சர்க்காரின் போக்கைத் தமிழகம், கூர்ந்துகவனித்துக்கொண்டுதான் வருகிறது. தமிழரைத் தாழ்வாகக் கருதிதான் தோன்றித்தனமாக நடந்துகொள்வதுகூடாது என்று சேனநாயகருக்கு எச்சரிக்கிறோம். தமிழரின் காலை மிதிக்கவேண்டாம்,அவர்கள் பிறர்தலை தம்காலில் உருளுமளவு போராடிய பரம்பரையினர். வீரர்களின் மனதைப்புண்படுத்த வேண்டாம் என்று எச்சரிக்கிறோம்.

தென் ஆப்பிரிக்காவில் இழைக்கப்படும் கொடுமை, இலங்கையில் நடைபெறும் அக்ரமம், இவைகள் இங்கே, நமது நாட்டிலேயே, நம்மவர்களிலே, பாடுபடும் பரம்பரையாக உள்ள பழங்குடியினருக்கு நாம் செய்யும் கொடுமைகளோடு ஒப்பிட்டால், சிறுபிள்ளை விளையாட்டாகவே தோன்றும். உலக மன்றத்தை நேருக்கு நேர்நின்று சந்தித்துப் பேசுமளவு, யோக்யதை நமக்குஇல்லை. நாம், நமதுமக்களில் ஒரு முக்கியமான பிரிவினரை நீதியுடன் நடத்திக்கொண்டு வரவில்லை. எனவேதான், சட்டமறுப்புக்கும் சாஸ்திர மறுப்புக்கும் உள்ள பேதத்தைநாம் முன்புவிளக்கினோம். ஆனால் இங்கு அநீதியும் அக்ரமமும் நடப்பதனாலேயே, உலகிலே வேறோர் இடத்திலே புதிதாக அநீதியும் அக்ரமமும் முளைத்தால், சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்பதில்லை. மக்களை மக்கள் தாழ்வாகக் கருதும் தத்துவத்தைத் தலைதூக்க விட்டதன் பலனைத்தான் இன்று நாம், சேரிகளிலேபார்க்கிறோம்.பேதஉணர்ச்சிக்குஎக்காரணத்தைக் கொண்டோ என்ன சாக்குக் கூறியோ, இடமளித்துவிட்டனர், இங்கு, முன்னோர்கள் காலத்திலே. அதன் விளைவு என்ன? அறிஞர்கள்கண்டு வெட்கப்படும் நிலையிலும், ஆற்றலுள்ளவர்களும், இதனை அடியோடு போக்குவது சுலபமாகத் தோன்றவில்லையே என்று ஆயாசப்படவும், அரசியல் கட்சிகள் ஆமைவேகத்திலே இது விஷயத்திலே நடக்கும்போதே ஆபத்து வருமோ என்ற பயத்தோடு இருக்கவேண்டியது மான, பயங்கரம் நிறம்பிய, சிக்கலான சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.பொறுமை வேண்டும்—படிப்படியாகத் தான் முன்னேற முடியும்—பக்குவமாக நடந்து கொள்ளவேண்டி இருக்கிறது என்றெல்லாம் கூறும்தலைவர்களையே காண்கிறோம். அலட்சிய சுபாவத்தாலே, அந்நாளிலே ஜாதிபேத அக்ரமத்தை நுழைய விட்டதனுடைய பலனை இன்று நாம், வட்டி தொடர் வட்டியுடன் சேர்த்துப் பெற்று வருகிறோம். தீண்டாமை, ஜாதிபேதம், என்ற கொள்கையும் திட்டமும், மெள்ள மெள்ள இங்கே நுழைந்தபோது, எதிர்த்திருந்தால், இந்தக் கேவலமான நிலைமை இன்று இராது.

அக்ரமத்தைச் சகித்துக்கொண்டதால், அநீதியைப் பொறுத்துக்கொண்டதால், இன்று மக்களைமக்களை தீண்டுவதும் கூடாது, அது பாபம், என்ற முதல்தரமான மடத்தனம், உயர்தரமான சாஸ்திர சம்பிரதாயமாகிவிட்டது. சமூகம்ஜாதிபேதத்தின் பிடியிலே சிக்கிச்சின்னாபின்னப்பட்டதைக் காண்பதால், அதனைப்போக்குவது எவ்வளவு கஷ்டமாகிவிட்டது என்பது தெரிவதால், முளையிலே கிள்ளிஎறியாததால், இன்று வெட்ட வெட்டத் துளிர்விடும் விஷவிருட்சமாக ஜாதி இருப்பதைக் காண்பதாலேதான். தென் ஆப்பிரிக்காவிலே, இன்று புதிதாக முளைக்கும் அக்ரமத்தை உடனே அழித்தாகவேண்டும்என்ற ஆர்வம்பிறக்கிறது. அலட்சியசுபாவத்தாலேயோ, எத்தனையோ துன்பமும் இழிவும் பழியும் இதனைவிட அதிகமாக இங்கே இருக்கிறது என்றஎண்ணத்தாலேயோ,சும்மா இருந்துவிட்டால், பிறகு ஒரு சில ஆண்டுகளிலே, அக்ரமம் நிலைத்துவிடுவதுமட்டுமல்ல, ஓங்கிவளர்ந்து பிறகு, நீசகமுடியாததாகிவிடும். ஆகவேதான், தென் ஆப்பிரிக்கச் சட்டமறுப்பைநாம்ஆதரிக்கிறோம். மனுவின் சாஸ்திரத்தை, சம்பிரதாயத்தை நமது முன்னோர்கள் ஏற்றுக்கொண்டதன் பலனாய், நாலாயிரம் ஜாதிகளாகி, பாழாகிவிட்டோம். மனு, ஆப்பிரிக்காவில், அதோ உலாவுகிறான், ஸ்மட்ஸ்உருவிலே என்றால், நமக்கு ஆத்திரம் வரத்தான் செய்யும். அந்தஅக்ரமத்திட்டத்தை அடியோடு ஒழிக்க அஞ்சாநெஞ்சுடன் போராடி,கண்காணாநாட்டிலே, வெள்ளையரின் சிறையிலே, புகத்துணிந்த வீரர்களைப்பாராட்டுகிறோம். அவர்களின் போர்,வெற்றிகரமாகமுடியவேண்டும் என்று ஆசைப்படுகிறோம். காந்தியார் சொல்வத போல, இங்கே ஜாதி இந்துக்கள் சம்பிரதாயத்தின் பேரால் என்ன,அநீதியைச் செய்கிறார்களோ, அதைத்தான், ஸ்மட்ஸ் ஆப்பிரிக்காவிலே சட்டத்தின்பேரால் செய்கிறார். "அந்தச் சட்டமும், இந்தச் சம்பிரதாயமும் தவிடுபொடியாக வேண்டும், மனிதத்தன்மையின் மேன்மையும் உரிமையும் நிலைக்கவேண்டுமானால். இன்று ஜாதி இந்துக்கள் கொண்டுள்ள சம்பிரதாயங்கள் அவ்வளவும் அந்த நாட்களிலே, மனுபுகுத்தியசட்டதிட்டங்களே. தென்ஆப்பிரிக்காவிலே உள்ள நமது நாட்டு மக்களைச் 'சேரிகளில்' தள்ளிவிடும், துணிவு எப்படி ஸ்மட்சுக்குப்பிறந்தது? 'சேரிகள்' கிராமந்தோறும் உள்ள இந்தியாவிலே இருந்துவந்தவர்கள்தானே இவர்கள், மனிதர்களிலேயே மேல்கீழ், ஜாதிகளைஏற்றுக்கொண்டு, வரைமுறை கெடக்கூடாது என்றுஇன்றளவுவரையில் நடந்துவரும் நாட்டிலே இருந்து வந்தவர்கள்தானே இவர்கள், இவர்களை இங்கேயும் சேரியில் தள்ளிவைக்கலாம் என்ற தைரியம்பிறந்தது. இங்கே, மனுவின் அக்ரமச் சட்டங்களையும், அவைகளை உள்ளடக்கியசாஸ்திர சம்பிரதாயங்களையும், நாம், தைரியமாக எதிர்த்து ஒழித்திருந்தால், பரங்கிக்குத்தைரியம் பிறந்திருக்கமுடியுமா? சாஸ்திர மறுப்பு இங்கே நடந்திருந்தால், அங்கே ஸ்மட்சின்சட்டம்பிறந்தே இருக்காது. அந்தத்தைரியமே உண்டாகாது. இப்போதும், அங்கே சட்ட மறுப்பு நடக்கட்டும்,இங்கே சாஸ்திரமறுப்பையும் துவக்கலாமே! ஏன், அதற்குமட்டும், உரிமை, விடுதலை வேட்கை, சர்வதேசநீதி ஆகியவைபற்றி மேதாவித்தனமான கருத்துரைகள்தரும், ஏடுகள், மௌனம்சாதிக்கின்றன. தென் ஆப்பிரிக்காவிலே, சட்டமறுப்புமூலம், ஸ்மட்ஸ் துரையின் சட்டத்தை ஒழிக்கத்திராவிட இளைஞர்கள் ஆயிரம்பேர் தருகிறோம், இங்கே சாஸ்திர மறுப்பைத் திராவிடர்கழகம் துவக்கினால், எத்தனை வீரர்கள், தாயகதரணிந்தோர்வரத் தயாராக உள்ளனர்? சட்டமறுப்புக்குமட்டுந்தானா வீரர்கள், சாஸ்திரமறுப்புக்கு இல்லையா? மனு, ஆப்பிரிக்காவிலே மட்டுந்தானாதாக்கப்படவேண்டும், இங்கே மனு மனம்போன போக்கிலே இன்னும் இருக்கிறானே கேட்பார் இல்லையா, நீதிகிடையாதா, என்றுதிராவிடர்கழகம் கேட்கிறது, நாட்டு மக்களை நோக்கி. பெருமூச்சுமட்டுந்தானே பதிலாகக்கிடைக்கிறது!

---

## அரசியல் நிர்ணய சபை

அரசியல் நிர்ணய சபைக்கு, சென்னை மாகாணத்துக்கு 49பேர் தேர்ந்தெடுக்கப்படுவர். இதில் 4பேர்முஸ்லீம்கள். முஸ்லீம், முஸ்லீம் தொகுதிக்கும், இந்து இந்து தொகுதிக்குந்தான் தேர்தலுக்கு நிற்கலாம். சட்டசபை அங்கத்தினரால் அபேட்சகர்கள், பிரேரேபிக்கப்படவேண்டும். அபேட்சகர்கள், சட்டசபையில் இல்லாதவர்களாக இருக்கலாம். அபேட்சகர்கள் தமது மனுவை ஜூலை 8ந் தேதி தாக்கல் செய்ய வேண்டும்.

அரசியல் நிர்ணயசபை ஒருவருஷம்நடக்கக்கூடுமென்றும்,மேற்படி சபைக்கு பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவருக்கு நாளொன்றுக்கு 75 ரூ. படி தரப்படும்என்றும் ஒருசெய்தி வந்திருக்கிறது.

---

## பாரதிதாசன் நிதி

கவிஞர் நிதிக்காகஇதுவரைசேர்ந்துள்ள தொகை:—

**ரூ. 18413—8—0**

---

## ஸ்பென்சர்

சென்னை ஸ்பென்சர் கம்பெனிவேலை நிறுத்த சம்பந்தமாக, காங்கிரஸ் மந்திரி சபையால், அமைக்கப்பட்ட பஞ்சாயத்துத்தாரர், தொழிலாளர்களின் பிரதிநிதிகள் ஐந்து அல்லது ஆறுபேர், தங்கள் தவறுக்காக மன்னிக்கும்படி, கம்பெனி நிர்வாகச் சபையினரிடம்கோரிக்கொள்ளவேண்டுமென்றும், அந்த மன்னிப்பு தெரிவிக்கப்பட்டபிறகு தொழிலாளர்களை, ஸ்பென்சர் கம்பெனியார், மீண்டும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், தமது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்,

---

காஞ்சிபுரத்தில்

## செங்கற்பட்டு மாவட்டத் திராவிடர் மாநாடு

**1946 ஜூலை 13, 14, சனி, ஞாயிறுகளில் நடைபெறும்**

பழைய கோட்டை

**தோழர் என். அர்ச்சுனன் தலைமை வகிப்பார்**

குடந்தை தோழர் கே. கே. நீலமேகம்
திறப்புவிழா வாற்றுவார்

தோழியர் எஸ். பொருட்செல்வியம்மையார்
கொடியேற்றுவிப்பார்

பெரியார், பொதுக் காரியதரிசி தோழர் திராவிடமணி, நெடுஞ்செழியன் ஆகியோர் சகிதம் வருகிறார். இயக்கத் தோழர்கள் பலரும் வருகிறார்கள்.

"சிவாஜி" "சந்திரோதய" நாடகங்களும் உண்டு.

## வேலை, நிறுத்தம்

★

"சார்! புதிதாக ஆள்சேர்க்கும் வேலையை நிறுத்திவிடுங்கள்."

"ஏன்?"

"ரயில்வே. வேலை நிறுத்தம் இல்லை."

"அப்பா! நல்லசேதி சொன்னீர்கள் சார். 'வேலைநிறுத்தம் நான் ஆரம்பிக்கிறேன்—அதாவது இனி உதிரிகளைப் பொறுக்கும் வேலை இல்லையல்லவா"

* * *

"லாரிகள் தேவையில்லை"

"ஏன், சார்!"

"ஸ்ட்ரைக்இல்லை!"

"ரொம்பச் சந்தோஷம் சார். உணவுப்பொருளைக் கொண்டுவர லாரிகளைத் தயார்செய்யும்படி நீங்கள் சொல்லிவிட்டீர்கள் வாய்ச் சுளுவாக. அப்பப்பா! அதிலே உள்ள கஷ்டம் இலேசா! இனி எனக்கு அந்தவேலை இல்லை. நிம்மதிதான்"

* * *

"ஸ்பெஷல் போலீஸ் வேண்டாம்"

"ஏன்"

"வேலை இல்லை—அவர்களுக்கு,"

"வேலை இல்லையா?"

"ஆமாம் சார், ரயில்வே வேலை நிறுத்தம்இல்லை, ஆகையால் இவர்களுக்குஇப்போது வேலைஇல்லை"

"அப்பா! நிம்மதி இப்போது தான்சார், ஏற்பட்டது,"

* * *

ரயில்வே வேலைநிறுத்தம், நிறுத்தப்பட்டு விட்டதால், ரயில்வே போர்டாரும் அதிகார வட்டாரமும், புதிதாகச் செய்யவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்த பலவேலைகள் நிறுத்தப்பட்டு விட்டன.

ஏதோ, சமயத்துக்குத் தக்கபடி சொன்னோம், வேலை நிறுத்தத்தை நிறுத்தி விட்டோம், என்ற களிப்பால், பொறுப்பை மறந்து விடாமல், நெடுநாட்களாகக் குறைகளை அனுபவித்துக் குமுறிக்கொண்டிருக்கும் ரயில்வே தொழிலாளர்களுக்கு, நியாயம் வழங்கும் காரியத்திலே அதிகாரவர்க்கம், முழுமனதுடனும், அக்கரையுடனும் இறங்கவேண்டும். தட்டிக் கழிப்பதோ, தொல்லை இப்போதைக்கு இல்லை என்று தூங்கப்போவதோ நியாயமாகாது. வேலை நிறுத்தம் நியாயமானது என்பதைப்பொது மக்கள் நன்கு தெரிந்து கொண்டனர் முதலில். அனுவசியமாகப் பொதுமக்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது, சமரசமாகப் பேசுவதற்குக் கொஞ்சம் இடம் ஏற்பட்டாலும், அதைத்தட்டிக் கழிக்கக் கூடாது என்ற பொதுநோக்கத்துடனும் பொறுப்பு உணர்ச்சியுடனும், தொழிலாளர்கள் இன்னம் கொஞ்ச நாளைக்கு ஈரத்துணியை வயற்றில் கட்டிக்கொண்டேனும் வேலைசெய்ய முன்வந்த பெருந்தன்மையையும் மக்கள் தெரிந்து கொண்டு, பாராட்டி உள்ளனர். வேலைநிறுத்தப் பேச்சு ஆரம்பமானதிலிருந்து அதிகார வர்க்கம் போட்ட அலறல் தொழிலாளருக்குள்ள மகத்தான "சக்தி" எவ்வளவு என்பதை மக்கள் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பமளித்தது. வேலை நிறுத்தத்தைத் தொழிலாளர்கள் இப்போது கைவிட்டது, அவர்களின் பெருந்தன்மையை விளக்கிவிட்டது. சக்தி வாய்ந்த மாபெருங் கூட்டம்பெருந்தன்மையோடு நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு ஏற்ற அளவு பொறுப்புணர்ச்சியுடனும் பெருந்தன்மையுடனும் ரயில்வே நிர்வாக அதிகாரிகளும் சர்க்காரும் நடந்துகொள்ள வேண்டும். ரயில்வே இப்போது தனிஉடைமை அல்ல, சர்க்காருடையது, சர்க்கார்ஜனங்களுடையது ஆகவே தொழிலாளர்கள் தகராறுசெய்வது, ஜனங்களுக்குத் தொல்லை கொடுப்பதாகும் என்ற விபரீதக்காரணத்தைத் "தேசியத் தாட்கள்" எழுதினை இதைப் போன்ற ஆபத்தான மனப்பான்மையும், பாசீசப்போக்கும் வேறு இல்லை என்று எச்சரிக்கிறோம். வெள்ளைக்கார முதலாளியிடம் மட்டுமே தகராறு நடத்தலாம், "நமது சர்க்கார்" நடக்கும்போது, கூலிக்காகவோ, உரிமைக்காகவோ, வேலைநிறுத்தம் போன்ற தகராறுகளில் இறங்கக்கூடாது என்று யோசனை கூறுவது, அசல் பேர்லின்வாதம்!

"நமது சர்க்கார்" என்பது வெறும் அலங்காரமல்ல, என்றால், தொழிலாளர்களின் குறைகளைக் கிளர்ச்சிகளுக்கு அவசியம் ஏற்படாதமுன்பே தீர்த்து வைக்க வேண்டும். பணம் இல்லையேஎன்ற பல்லவியைப் பாடினால் பாட்டாளி காதிலே இனிக்காது. பசியோடு போராடும் பாட்டாளியிடம் இந்தப் பல்லவியைப் பாரதமாதாவே பாடிக்காட்டினாலும் "தாயே! பசி காதை அடைக்குது, உன்பாட்டைக் கொஞ்சம்நிறுத்திக்கொள்" என்றுதான் கூறவேண்டி வரும். ஆகையால், "நமது சர்க்கார்" என்ற தேன் பூச்சுமாத்திரையைத் தந்து தொழிலாளவர்க்கத்தைத் தூங்கவைத்து விடலாம் என்று வீண் எண்ணம் கொள்ளாமல், விரைவாக இவர்களின் குறைகளைத் தீர்த்துவைக்குமாறு சர்க்காரையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் கேட்டுக்கொள்கிறோம். நம்பிக்கையுடன்.

## வேண்டாம், விபரீதம்

53பேர் ஒருகட்சி! 14000 பேர் மற்றோர் கட்சி! 53 பேர், வடநாட்டார்கள், 14000பேரும்தமிழர்கள். வடநாட்டார், பாராவேலை, தமிழருக்குப்பாடுபடும் வேலை, தமிழர்கள் அறுபது ஆண்டுகளாக உழைத்து, கோடி கோடியாக இலாபத்தைக் குவித்திருக்கிறார்கள், வடநாட்டார் பட்டாளத்திலேயிருந்து விலகி சேர்ந்துவந்தார்கள்,பட்டாக்கத்தியை உருவிக்கொண்டு. பாடுபடும் தமிழன்,. பல ஆண்டுகளாக உழைத்தவன், தமிழ் அறியாத,மக்களைநடத்தும் வகை அறியாத,மிரட்டும் போக்கும், முரட்டுக்குணமும் படைத்தவர்களைக் காவலாளிகள் என்று போட்டிருக்கிறீர்களே, அவன் கூறும் "பத்மாஷ்! மாரே!" என்னும் வசைமொழிகளைக் கேட்டுக்கொள்ளவும், தடியால் தாக்குவதைப்பொறுத்துக் கொள்ளவும், கத்தி, இருப்புக்கம்பு ஆகியவற்றைக்காட்டி மிரட்டுவதைச் சகித்துக்கொள்ளவும் முடியாது, ஐயா முதலாளி! உன் அமுலுக்குத்தான் ஏதோ கட்டுப்பட்டு வேலை செய்கிறோம். எங்கோகிடந்தவனை இங்கே கொண்டுவந்து வேறு, எங்களைஇம்சைப்படவிடலாமா, வேண்டாம் இந்த வடநாட்டுப்பாராக்காரர்கள் தமிழ்தெரிந்தவர்களைநியமித்துவிடு" என்று கேட்கின்றனர், பக்கிம்ஹாம், கர்நாடிக்மில்லிலே வேலை செய்யும் 14000 'பேர்'. முதலாளி, முடியாது என்று கூறுகிறான். பாஷை புரியாததாலும், அவசரக் கோபத்தின் விளைவாகவும், எழெட்டுத்தொழிலாளர்களை, அந்தக்காவல்காரர்கள் முன்பு, மில்லிலே அடித்துக்காயப்படுத்தினராம்.

எப்படி பாட்டாளிகள் மனம் பதைக்காமல் இருக்கமுடியும்? இவ்வளவு அவசரப்பட்டு, அடிகொடுக்கும் பேர்வழிகளைக் காவலாளிகளாக அமர்த்தியுள்ள ஆலையிலே, எப்படிப்பயமின்றி நிம்மதியாக வேலைசெய்யமுடியும்? ஏதோ நடந்ததுநடந்துவிட்டதுஎன்றுபொறுத்துக்கொண்டாலும், இதுபோலவோ இன்னம் விபரீதமாகவோ, கலவரமோ கலகமோ மேலும் நடைபெற்றால் என்ன செய்வது? ஏன், தமிழ்நாட்டு ஆலையிலே தமிழரைக் காவலாளியாக ஏற்படுத்தக்கூடாது. என்று கேட்கின்றனர் தொழிலாளர்கள். முதலாளித்துரைக்கு மூக்கு சிவந்துவிடுகிறது கோபத்தால், அவருடைய மூக்கு சிவப்பதைவிட அதிகமாகச்சிவந்து விட்டதாம்முதலமைச்சர்பிரகாசம் பந்துலுகாருவுக்கு! வேலை நிறுத்தம் நடக்கிறது அமைதியாக.14000பேர் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள், சென்னையிலே ஒவ்வொரு நாளும் பொதுக்கூட்டம் நடக்கிறது, ஒருசிறு கலவரமும் இன்றி, மிகக்கட்டுப்பாடாக, ஒழுங்காக, அமைதியாக. இதுபோல், இவ்வளவுபெரிய வேலை நிறுத்தம் இவ்வளவு ஒழுங்காக எங்கும் நடைபெற்றதில்லை என்று கூறலாம். யாரும் பாராட்டுவார்கள், தோழர்களின் கட்டுப்பாட்டு உணர்ச்சியையும் பொறுப்பை உணரும் போக்கினையும். மறியல் நடத்தினர் தொண்டர்கள், தொழில் மந்திரி தோழர் கிரி, மறியல் சுதந்தரம் உண்டு என்று திருவாய் மலர்ந்தருள்கிறார். மறியல்காரர்கள், கலவரம் விளைவித்தனர் என்று கூறிக் கைது செய்யப்பட்டு, தண்டிக்கப் பட்டனர்! நடப்பது அட்லவசர் ஆட்சி அல்ல, ஆந்திரகேசரி பிரகாசம் தலைமையிலே பாரதமாதாவின் புத்ரர்கள் ஆள்கின்றனர்.

"50 பேர் மட்டுமா? கொண்டு வருகிறேன் 5000 வடநாட்டானை" என்று உறுமுகிறதாம், முதலாளித்வம்.

"வேலைநிறுத்தமா செய்கிறீர்கள், முதலாளிக்கு கோடீஸ் கூடக் கொடுக்காமல், நான் ஆதரிக்கமுடியாது இந்தப்போக்கை" என்கிறாராம் பிரகாசப் பந்துலு.

டெலிபோனில் பேசிப் பேசிப் பார்க்கிறாராம் தொழில் மந்திரி. "கஷ்டமாகத்தான் இருக்கிறது, கண்டுபேசுகிறேன் மந்திரிமார்களை" என்று கண் துடைத்துக் கொள்கிறாராம் காமராஜர். கன்னியப்பனார், நல்லவேளை, எலக்ஷன் முடிந்துவிட்டது" என்ற திருப்தி அடைகிறார் போலிருக்கிறது.

இந்த 53பேர்களுக்காகப்பரிந்து பேசும் முதலாளியின் போக்கைத் திருத்தவேண்டும் என்ற நினைத்தால், மந்திரியால் முடியாதா? ஒரே டெலிபோன் பேச்சிலே நடைபெறாதா! "மிஸ்டர் டவுன்! இதென்னதொல்லை, தொழிலாளர்கள் 14000 பேர் ஒரே முகமாகப் பேசுகிறார்கள். அவர்கள் நலனும் பாதுகாப்பும் சுயமரியாதையும் காப்பாற்றப்படவேண்டும் என்பதுதானே அவர்கள் கோரிக்கை. இதற்கு வீண்வீம்பு பேசிக் கொண்டு இருப்பது அழகல்ல அந்த 53 பேருக்கு வேறே வேலை தந்துவிடு. வேலை நிறுத்தம் விபரீத உருவெடுக்குமுன்பு" என்று கண்டிப்பான குரலிலே,பிரகாசம்அவர்களோ, கிரி அவர்களோபேசினால், டவுன்துரை இவ்வளவு தர்பார் நடத்துவாரா? ஒரு ஆலை முதலாளியை, அடக்கவோ, சரிப்படுத்தவோ முடியாத மந்திரிசபைபீடம், மக்கள் எதை எதையோ எதிர்பார்க்கிறார்களே! வெள்ளையனே! வெளியேபோ! என்று முழக்கமிட்டமாபெருந்தலைவர்கள், மந்திரிப்பீடம் ஏறினதும், ஒருமில் முதலாளியைக்கண்டதும் சர்வ நாடியும் அடங்கிவிடக் காரணம் என்ன? 14000 பாட்டாளிகளின் அல்லலுக்குப்பரிகாரம் தேடாவிட்டால், வடநாட்டுக் காவலாளிகள் நீக்கப்படவேண்டும்என்ற இந்தச் சாதாரண விஷயம், வடநாட்டவருக்கு இங்கு என்ன வேலை என்றஉருவில் வளர்ந்து, சென்னையிலுள்ள, மார்வாரி, குஜராத்தி, சேட், கடைகளிலே தமிழர்கள் நின்று மறியல் செய்யும் நிலைமையை உண்டாக்கிவிடக்கூடும் என்பதை மந்திரிசபை உணரவேண்டும்! வெள்ளையனே வெளியேபோ! என்ற வீரமுழக்கம் கிளம்பிய நாட்களிலே, இது அசாத்தியம் என்று யாரும் கூற முடியாது. இந்த நிலைமையை வரவழைத்துக்கொள்ள வேண்டாம் என்று, மந்திரிமார்களுக்கு, அன்புடன் கூறிக்கொள்கிறோம். பிறகு அவர்கள் இஷ்டம்; கஷ்டம் நமக்கல்ல!!

"தொழிலாளர்களுக்குத் தலைவர்" என்ற நிலையிலிருந்து,தொழில் மந்திரிஎன்ற பதவிக்கு வந்திருக்கும் கனம். கிரி, முதலாளித்வத்தின் முதுகெலும்பு முறியும்படிச் செய்யலாம். மார்க்கம் இருக்கிறது, மனம் இல்லை. எதற்கெடுத்தாலும் மந்திரியார், விசாரணை அதிகாரி நியமித்தல், சமரசத்தூதர் நியமித்தல் என்று ஆரம்பிக்கிறார். இந்தமுறை, சர்வசாதாரணமாக, கிரியார் இலேசாக இருந்த காலத்திலேயே இருந்துவந்ததே. இவர் புதிதாக ஒன்றும் "அபூர்வமுறையைக்கண்டு பிடிக்கவில்லை. எல்லாவற்றுக்கும் செய்வது போலவே, இந்த பக்கிங்காம் கர்நாடிக்மில் தொழிலாளர் சம்பந்தமாகவும், ஒரு விசாரணைக் கர்த்தா நியமிக்கப்பட்டிருக்கிறார். ஜட்ஜுவேலை செய்து ஓய்வு எடுத்துக்கொண்டுள்ள ஒருஆந்திரப்பார்ப்பனர். பந்துலுகாருவின் வேலை துவக்கமாகிறது, நடக்கட்டும். ஆனால் மந்திரியாரைநாம் ஒன்று கேட்கிறோம், "ஏன் இப்படிச் சுற்றி வளைத்துக் கொண்டு போகவேண்டும்? ஒரு டவுன்துரையை, உமது அதிகாரத்தால், வழிக்குவரும் படிச்செய்ய முடியவில்லையா? மாகாணத்திலே மந்திரியாக இருக்கும் நிலையிலே, ஒரு வெள்ளைக்கார முதலாளித்வ ஏஜண்டின் போக்கைக் கட்டுப்படுத்த, அதிகாரமே இல்லையா? அதுகூட இல்லைஎன்றால், எதற்கு இந்த மந்திரிவேலை! உண்மை, என்ன? அதிகாரம் இருக்கிறது, ஆனால் மந்திரிமார்களுக்கு, வேறு எதுவோ குறுக்கிடுகிறது, ஆங்கிலேயர் விஷயமாக, குறிப்பாக ஆங்கிலேய முதலாளிமார் விஷயமாக ஏதேனும் செய்வது என்றால் அச்சமா? அல்லது அன்பா? இரண்டும் தவறுகூடாது.

---

### ஆச்சாரியார் ஜாதகம்!

அடபாவமே! இங்கேதான் நிற்க நிழல்இல்லை, அங்கே போனால் கோடிகட்டி ஆளலாம் என்று ஆச்சாரியார் ஆசைப்பட்டார், கல்கியார் கனவுகண்டார், வைசிராயும், ஆச்சாரியாரை அழைத்தார், அடிக்கும்யோகம்என்று ஆச்சாரியாரின் சீடகோடிகள் களித்தன. வெண்ணையும்திரண்டது, தாழியும்உடைந்தது என்பதுபோல, ஆச்சாரியார் அமருவதற்கு, ஆசனம் தயாரானதும், காங்கிரஸ், இடைக்கால சர்க்கார் ஏற்பாட்டுக்கு இணங்க முடியாது என்றுகூறிவிட்டதே! ஆச்சாரியாரின்ஜாதகபலன் இப்படியா இருக்கவேண்டும்!! கண்ணன், இப்படித்தானா வழிகாட்டுவது?

## ரங்கோன் ராதா

*3-ம் பக்கத் தொடர்ச்சி*

தரவேண்டிய கடமை அவருக்கு. அவரோ அதற்கு நேர்மாறாக நடந்து கொண்டார். பேய் கெட்டது என்பார்கள். அந்தப்பேய் செய்யக்கூடிய பெரிய உபகாரமும் இருப்பதை எண்ணிப் பார்த்தபோது நான் சந்தோஷமடைந்தேன்.

கிராமத்திலே சிலநாட்கள் தங்குவது, பேயோட்டுவதாகச் சொல்லும் புரட்டனின் பூஜைமுதலிய வீண்காரியங்களைக் கொஞ்சநாட்களுக்குச் சகித்துக்கொள்வது, அவனைப்பார்த்துப்பேய் நீங்கிவிட்டது என்று கூறும்படிஒழுங்கான முறையிலே நடப்பது, பிறகு வீடுதிரும்புவது, அங்கேயும் சிலதினங்கள்,நிம்மதியடைந்ததாகவே பாவனை செய்வது, பிறகு திடீரென்று, உன் அப்பாவின்மீது பழிவாங்கும் காரியத்தைத்துவக்குவது என்றுதீர்மானித்தேன். அதாவது, என்னை நீக்கி விட, உன்அப்பா என்மீது ஏவிய 'பேய்' இருக்கிறதே, அதனை, அவருடைய கொடிய குணத்துக்காக அவரைத்தண்டிக்கும்படி, அவர்மீது நான் ஏவிவிடுவது என்று திட்டமிட்டேன். இந்தஎண்ணததால், எனக்கோர் வகையான ஆனந்தம்உண்டாயிற்று. என் அப்பாஓரோாள் பூஜையிலே, பிரக்யாதிபெற்ற பக்கிரி, ''குழந்தையின் முகத்திலே, களைவரும் படிச்செய்துவிட்டான்'; என்று கூறிக் கொண்டார் என்முகப் பொலிவைக் கண்டு. ''பைத்யக்காரா அப்பா! உன்மகளைப்பேயும் பிடித்துக்கொள்ளவில்லை, பூதமும் தூக்கிக்கொண்டுபோகவில்லை. உன்மருமகனின் வஞ்சகம், என்னை இந்த கதிக்கு ஆளாக்கிவிட்டது''. என்றுநான் சொன்னால் அவர் நம்புவாரா? அந்தப் புரட்டன் சொன்ன அத்தனை புளுகுகளையும நம்பினர்.

பேயோட்டும் பக்கிரி, முதல்தரமான புரட்டன் என்பது, அவனைப்பார்த்த முதல்நாளே எனக்கு விளங்கிவிட்டது. என்னைப்போலப் பேய்பிடித்தபலபெண்கள் அங்கே வந்திருந்தார்கள். அந்தக் கிராமத்திலேயே, அவனுடைய வீடுதான் மாடிவீடு; மற்றவைகுடிசைகள். பக்கிரி, ஏழைகளுக்கு இலவசமாகப் பேயோட்டுவது, பணக்காரர்களிடம்கூட வற்புறுத்துவதில்லை, இஷ்டப்பட்ட காணிக்கை செலுத்தலாம் என்று கூறுவது; இந்த முறையிலே நடத்திவந்தான், வியாபாரத்தை. இதிலே, அவன் கையாண்டதந்திரம், என்னவென்றால், ஏழைகளுக்கு இரண்டொரு நாட்களிலே பேய் ஓடிவிடும்படிச் செய்துவிடுவான், அல்லது, இன்னும் இரண்டுவருஷம் கழித்துவந்தால் இந்தப்பேயை ஓட்டமுடியும். என்று சொல்லி அனுப்பிவிடுவான்; பணக்காரர்கள் பேயோட்டிக்கொள்ளச் சென்றாலோ, கொஞ்சத்திலே விடமாட்டான். நாற்பதுநாள் முழுக்கு, முப்பதுநாள் கோயில் சுற்றுவது, பத்துநாள் பச்சிலைத்தைலஸ்நானம், பிறகு பூஜை, அதன்பிறகு விசேஷபூஜைஇப்படிமாதக்கணக்கிலே நடத்திக்கொண்டே போவான். ஒருவாரத்துக்கொரு முறை வெள்ளி, பொன், ரட்சைகள் தயாரித்துதந்தபடி இருப்பான். இதற்செல்லாம்பிடிக்கும் செலவுதவிர,வேறுபணம் தானுகக்கேட்பதில்லை என்றுகூறி,இதன் மூலமாகவே, பத்துகாணி நல்லநஞ்சையும், ஊருக்குப்பக்கத்திலேயே ஒருதோப்பும் வாங்கிவிட்டான், மாடிவீடுகட்டிக்கொண்டான், மூன்று பெண்களை நல்ல இடத்திலே கலியாணம் செய்துகொடுத்தான், அந்த மருமகப்பிள்ளைகளை பெரிய உத்தியோகஸ்தர்களின் தயவுதேடி, நல்ல வேலையில் அமர்த்திவிட்டான். இவ்வளவும், ''பேயோட்டும்'' புரட்டிலே சம்பாதித்துக்கொண்டான். ''மகாராஜாக்களும், மிட்டாதாரர்களும், ஹைகோர்ட் ஜட்ஜூகளும்'' தந்த சர்ட்டிபிகேட்டுகள்ஒரு கத்தைவைத்துக்கொண்டிருக்கிறான். பெயர்தான் பக்கிரியேதவிர, ஆள்பெரிய ஜெமீன்தார்போலத்தான்; கையிலே காப்பு, காதுகளிலே கடுக்கன், கழுத்திலே தங்கத்தால் சங்கிலி, அதிலேவேறோ ஒருபெரிய ரட்சை, கல்லிழைத்து. பூஜை அறையிலே வெள்ளிப்பாத்திரங்கள். இவ்வளவு வைபவமும் இருந்தன. இரவு பனிரண்டுமணிக்கு அவனிடம் ''பராசக்தி'' பிரசன்னமாகிப்பேசுமாம். அந்தப்பக்கிரி, என்னைஏற இறங்கப்பார்த்துவிட்டு, மரியாதையுடன், ''உட்காரம்மா! உட்கார்!'' என்றான். உட்கார்ந்தேன்.

''இதோ, குழந்தே! இதைவாயில் போட்டுக்கொள்'' என்று ஏதோ ஒரு சூரணத்தைக்கொடுத்தான். இனிப்பாகத்தான் இருந்தது. ''கசப்பு அதிகமாம்மா?'' என்று கேட்டான், ''இல்லையே! தித்திப்பாகத்தான் இருந்தது'' என்று நான் சொன்னேன். பிறகு, அவன் என்அப்பாவைப்பார்த்து, ''பயப்பட வேண்டாம். குழந்தைக்கு பேய் முற்றிவிடவில்லை. சக்கரை எப்போது இனிக்கிறதோ, அதிலிருந்தே, நிலைமை மோசமில்லை என்று தெரிகிறது. சிலபெண்களுக்கு சக்கரைகூடக் கசப்பாகிவிடும், பேயின் சேஷ்டையால்'' என்று சொன்ஞன். என் அப்பாவையோ, சட்டை செய்யப்போவதில்லை இனிமேல் என்று தீர்மானித்துவிட்ட எனக்கு, இந்தப் புரட்டனிடம் என்ன பயம்? நான்பேசலானேன்,

''சக்கரை இனிப்பாகத்தானே ஐயா! இருக்கும். அதற்கும், பேய்க்கும் என்ன சம்பந்தம்''

''சக்கரைஇனிப்பாகத்தான் இருக்கும் குழந்தே! ஆனல், அதுகூடக்கசப்பாகிவிடுவதுண்டு''

''ஆமாம்! அதற்கு பேய் பிடிக்கவேண்டியதில்லையே. பலநாள் ஜூரம் அடித்தால், வாய் கசக்கிறது''

''ஜூரம் வேறு,பேய்பிடிப்பதுவேறு''

''ஆமாம்! அதையார் இப்போதுமறுத்தார்கள்.பேய்பிடித்திருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்வதற்குச் சக்கரை இனிப்பா, கசப்பா, என்று பார்ப்பது ஒருபரீட்சையா? வேடிக்கையாக இருக்கிறதே''

''குழந்தே! நீ இப்படியே சந்தோஷமாக இருந்தால் போதுமம்மா''

''அது கிடக்கட்டும். எத்தனை நாள் ஆகும், பேய்போக''

''சீக்கிரத்திலேயே முடியும், கவலைப்படாதே''

''பேய் ஓடுமா, ஓட்டுவீர்களா?''

'ஓடும் பேயும் இருக்கிறது, ஓட்ட வேண்டியபேயும் இருக்கிறது''

''ஓட்டினலும் ஓடாதபேய் கிடையாதோ?''

''பக்கிரி ஓட்டினல் ஓடாதபேய்கிடையாதம்மா. பக்கிரியா ஓட்டுகிறான், பராசக்தியல்லவா ஓட்டுகிறாள்''

''பராசக்தி, உனக்கு அந்த அருளைத் தந்தது ஏன்?'

,'என் பூஜாபலன்''

''என்னைப்பேய் பிடித்துக்கொண்டது ஏன்?''

''உன் வினை''

''என்வினையை, உன் பூஜாபலன்தீர்த்துவிடுமா?''

இப்படிப் பேச்சுமுற்றிக் கொண்டே போயிற்று, எங்கள் இருவருக்கும். பதில் கூறமுடியாமல் திணறினன், பக்கிரி. ஆனல் அந்தத்திணறலை மறைக்க, அடிக்கடி, பராசக்தி பராசக்தி என்று உரக்கக் கூவிக்கொண்டிருந்தான். பேயோட்டும் பக்கிரியின் வாயைஅடைத்துவிட்டோம் என்று ஒருமகிழ்ச்சி எனக்கு. ஆனல்அந்தப்புரட்டன் சாமான்யமான பேர்வழியல்ல, கொஞ்சநேரம் கண்களை மூடிக்கொண்டிருந்துவிட்டு, பிறகு என்தகப்பனைப்பார்த்து, ''ஐயா! உம், மகளைப் பிடித்துக்கொண்டிருக்கும், பேய், இன்னதுஎன்று பராசக்தி கூறிவிட்டாள். மற்றபேய்களை ஓட்டுவதற்கும்இதற்கும் அதிக வித்தியாசமுண்டு. மற்றப்பேய்கள் முரட்டுத்தனம் செய்யும், இந்தப்பேய் முரட்டுத்தனம்செய்யாது.எப்போதுமே, முரட்டுத்தனம் செய்கிற பேயைச்சுலபத்திலே ஓட்டிவிடலாம், இது அவ்வளவு சுலபமல்ல'' என்றான்.

''நங்களாலே முடியாதபோகுமா?'' என்று, தயவு கலந்தகுரலிலே கேட்டார் அப்பா.

''முடியும்! ஆனல் கொஞ்சம் நாளாகும்'' என்றான் அவன்.

''என்னவிதமான பேய்?'' என்றுகேட்டார் அப்பா,

''அதைத்தான் கண்டுபிடிக்கக் குழந்தையிடம் பேசிப்பார்த்தேன். எப்படிப் பேசிற்று பார்த்தீர்களல்லவா? மளமளவென்று பேச்சு இருந்தது. கேள்விமேல் கேள்வி போட்டுவிட்டது'' என்றான் பக்கிரி.

''ஆமாம்!'' என்றார் என் அப்பா.

''அது, குழந்தையின் பேச்சா?பேசுமா அப்படி?'' என்றுகேட்டான்அந்தப்புரட்டன்.

''சாதாரணமாக சங்கோஜப்படுகிற குழந்தைதான். இங்கேதான் கொஞ்சம் தாராளமாகப் பேசிற்று. ஆனல் துஷ்டப்பேச்சு இல்லையே'' என்றார் என் அப்பா.

''துஷ்டப்பேச்சு, பேசாது. முரட்டுப் பேய்களல்லவா, கெட்டவார்த்தை பேசும். அப்படிப்பட்ட பேய்களை, ஒரு மண்டலகாலத்திலேயே ஓட்டிவிடலாம். இது, சாதுப்பேய்!'' என்றான்புரட்டன்.

''சாதுப்பேய் என்று சாமான்யமாகச் சொல்கிறீர். வீட்டிலே நாங்கள் பட்ட கஷ்டம் எவ்வளவு தெரியுமா?'' என்று சோகத்துடன் சொன்னர் என்அப்பா.

''பழமொழியே இருக்கிறதல்லவா, சாதுமிரண்டால்காடுகொள்ளாதுஎன்று அதுபோல நடந்திருக்கும்'' என்றுவிளக்கம் கூறினன், அந்தப்பூஜாரி.

''சாதுப்பேய், கொஞ்சநாளிலே போகாதா?'' என்று கேட்டார் அப்பா. ''ஆமாம்'' என்றான் பக்கிரி. அது ஏன் என்றார் அப்பா, முரட்டுப்பேயாகஇருந்தால், போகமுடியாது நீ என்ன செய்ய முடியும், என்றுகொக்கரிக்கும்; உடனே அதற்குத்தரவேண்டிய தண்டனையைத் தந்து, துரத்திவிடலாம் சுலபத்திலே; ஆனல் இந்தச்சாதுப்பேய், ஆயிரம்விதமான சமாதானம் சொல்லும், பலகேள்விகள் கேட்கும், கோபிக்காது ஆனல் பேசிப்பேசி உயிரை வாங்கும், இவ்வளவுக்கும் நான் சமாதானம் சொல்லி,காரணம் காட்டி அது கேட்கிற கேள்விகளுக்குப்பதில் கூறிமுடிய,நாள் அதிகம்பிடிக்கும். ஐயா! உமதுமகளைப்பிடித்துக்கொண்டிருக்கும்பேய் சாதுமட்டுமல்ல' சாமர்த்தியமாகப் பேசக்கூடியது. பேய்களிலே, பலரகம் உண்டு. கொலைகாரப்பேய், முரட்டுப்பேய், பொய்பேசும்பேய், வயிற்றுவலிப்பேய், வம்புக்காரப்பேய், சிரிக்கும் பேய், அழுகிறபேய், என்று இதிலேஆயிரத்துக்குமேலே 'ரகம்' இருக்கிறது'' என்றான் புரட்டன்.

''பேயிலேமட்டுந்தானு? நீசொன்னது அவ்வளவும் மனிதர்களிலே இல்லையா?'' என்று நான் கேட்டேன்.

''இல்லை என்று யார் சொன்னர்கள்? மனிதர்களில்பலரகம்; அதுபோலத்தான் பேய்களிலும். மனிதர்கள் இறந்துபோய் பேய் உருவடைந்தார்கள் என்பதுதான் எங்கள் சித்தாந்தம். பேய்உருவிலேஇருக்கும்போதும், மனிதராக இருந்தபோது இருந்த சுபாவம், இருக்கும். அதனலே தான் பேய்களிலே பலரகம்இருக்கிறது'' என்றான் அந்தப்புரட்டன்.

''எந்தெந்தரகமான பேய் பிடித்துக் கொள்கிறதோ அந்தந்த சுபாவம், பேய் பிடித்துக்கொண்ட ஆசாமியிடம் இருக்கும் என்று சொல்கிறீரா?''என்று நான் கேட்டேன்.

''அதேதான். போனவருஷம் இங்கே ஒருபெண் வந்திருந்தாள், பேயோட்டிக் கொள்ள. சதாசர்வகாலமும் ' பாடிக் கொண்டேஇருப்பாள்' என்றான்பூஜாரி.

''சங்கீதப்பேய், பிடித்துக்கொண்டதோ'; என்று நான் கேலிசெய்தேன்.

''உண்மையாகத்தானம்மா. அந்தப் பெண் இருந்த ஊரிலே, ஒருபையன், அருமையான சங்கீதம் பாடுபவன். அதிர்ஷ்டம் இல்லாததால் ஆதரிப்பவர் கிடைக்கவில்லை. கடைசியில் தூக்கிட்டுக் கொண்டுஇறந்துவிட்டான். பேயானன்; பெண்ணைப்பிடித்துக்கொண்டான்'' என்று பேயின் சரித்திரமே கூறலானன்.

''அப்படியானல், என்னைப்பிடித்துக் கொண்டிருக்கும் பேய்..................'' என்று நான் கேட்டேன்.

''எழுத்துக்கு எழுத்து பொருள் கேட்டு, வாதாடிப்பேசவும், எதிரியின் வாயை அடக்கிப்பேசவும், வக்கீலால் தானே முடியும்'' என்றான் அவன்.

''அப்படியானல் என்னை வக்கீல்பேய் பிடித்துக்கொண்டதோ!'' என்று சிரித்துக்கொண்டே கேட்டேன்.

—— (தொடரும்)

## கல்வி நீரோடை

*2-ம் பக்கத் தொடர்ச்சி*

| | | | |
|---|---|---|---|
| என்ஜினியரிங்கல்லூரி | | 127 | 205 |
| விவசாயக் | ,, | 45 | 55 |
| வெட்டனரி | ,, | 61 | 45 |
| டெக்னிகல் | ,, | 31 | ,7 |

புள்ளி விவரங்களைப் பார்க்கும் பொழுதே இனவாரியான விகிதாச்சாரம் சரியாக அமையவில்லை என்பது நன்றாகப்புலப்படும், 100-க்கு 3-ஆகஉள்ள கூட்டத்திற்கு, 100-க்கு 40,50-க்குமேல் இடங்கள் கிடைத்து விடுகின்றன. ஆசிரியர் கல்லூரியில் பார்ப்பனர்'' திராவிடரைவிட இரண்டு மடங்குக்கு மேல்அதிகம். டெக்னிகல் கல்லூரியில் நான்கு மடங்குக்கு மேல் அதிகம். வெட்னரியிலும் முப்புரிக்கூட்டத்திற்கே முதலிடம்

தாழ்த்தப்பட்டோர் இந்தக்கல்லூரிகளில் எட்டிப் பார்க்கவேயில்லை. அந்த 18-லட்சமக்களில் ஏதோ தப்பித்தவறி 22-பேர் இந்தக்கல்லூரிகளில் இருக்கின்றனர். தாழ்த்தப்பட்டோரில் மெடிகல் கல்லூரியில் 9-பேர், ஆசிரியர் கல்லூரியில் 3, என்ஜினியரிங் 5, விவசாயக்கல்லூரி 5, மற்ற சட்டக்கல்லூரி, வெட்னரி, டெக்னிகல் கல்லூரிகளில் ஒருவர்கூட கிடையாது.

* * *

கல்விக்காக ஆண்டுதோறும் 6-கோடி, 7-கோடி ரூபாய்என்று செலவுசெய்யப்படுகிறது. அதனல் பலன்என்னவென்று பார்த்தால்100-க்கு97-ஆகவுள்ளதிராவிடமாணவர்கள் கல்வித்துறையில் கண்ணுக் கெட்டாத தூரத்தில் இருக்கின்றனர்,இதைநாம் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. சர்க்காரின் அறிக்கைகள் கூறுவதுதான். ஒன்று கெடுதலைப் பயப்பது என்றுதெரிந்திருந்தும் அதையே தொடர்ந்து நடத்துவது பெருங் குற்றமாகும், அதை அரசாங்கம் இன்றுவரை புரிந்து வந்திருக்கிறது. சென்ற சென்சஸ் முடிவுகள் வெளியிடப்பட்டபொழுது, கல்வியறிவுஎன்ற தலைப்பை எழுதும்பொழுது, அதில் ''கல்வியறிவில் பார்ப்பனர்கள் மற்ற வகுப்பினரால் எட்டிப்பிடிக்க முடியாத அளவுக்கு முன்னேறியுள்ளனர். ஆங்கிலக்கல்வியில் அவர்களது முன்னேற்றம் அபரிமிதமானது.'' என்று சர்க்கார் குறிப்பு எழுதியுள்ளனர், இதைப் பார்த்தவுடனுவது அரசியலாருக்குநல்லெண்ணமும், நீதியில் நம்பிக்கையும் இருந்திருந்தால்அவர்கள் கல்வித்துறையில் நடைபெறும் அநீதியை அழித்திருக்க வேண்டும் வரிப்பணத்தை செலுத்துவது நாம் அதன் பலனை அனுபவிக்க இன்னொரு கூட்டம்- நெல்லுக்குபாய்ச்சப்பட்ட நீர் வழியிலுள்ள விழலுக்கு மாத்திரமே பாய்கிறது.

கல்வி நீரோடை அனைவருக்கும் பொதுவானது. குளம் வெட்டுபவனுக்கு குளத்துநீரைஉபயோகிக்க முடியாதபடி இருப்பது போல, கல்வி நீரோடையைப் பராமரிக்க பொதுமக்களனைவரும் வரிப்பணம் செலுத்தியபோதிலும் அதனல் நாட்டுமக்களுக்குப் பயன் விளையவில்லை.சிறுபான்மையினரானபார்ப்பனர் 100க்கு 53பேர் கல்வியறிவு பெற்றிருக்க திராவிடர் 100க்கு 8பேருக்குக் குறைவாகவே கல்வியறிவு பெற்றிருக்கின்றனர். கல்வி நீரோடை பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் பாய்ந்து மக்கள் மனவளத்தைப்பெருக்கவில்லை.அந்தப்பாய்ச்சலுள்ள பள்ளிக்கூடங்களும், கல்லூரிகளும்பார்ப்பனரின் ஆதிக்க இடங்களாகிவிட்டன.திராவிடஇனத்தின் கல்வியறிவுவரண்ட பாழ்நிலமாகக் காணப்படும் பொழுது, பார்ப்பனரின் கல்வியறிவு செழித்தோங்கி வளர்ந்துள்ளது. ஊருக்குப் பொதுவான நீரோடை ஐயருக்குப் பயன்படுவதைக்கண்ட உழவனுக்கு வேறு வழியில்லாது திகைத்த நேரத்தில் ''ஒரேவழிதான்'' எனப்பெருமூச்சுடன் கூறியதுபோல, கல்வி நீரோடை கங்கா புத்திரர்களின் கமண்டலநீராக ஆனதைப் பார்க்கும்பொழுது நமக்கும் வேறுவழி தோன்றவில்லை, அந்த ஒரே வழி தான் இருக்கிறது. அந்தவழிசென்றால்தான், கல்விநீரோடை நாடெல்லாம் பாயும்.

# மலையாள,மொழித் தோற்றம்

(அந்தோனி)

சரித்திர காலத்திற்கு முன்பாக இவ்விந்திய உபகண்டம்முழுவதும் தமிழ் மொழியே பேசப்பட்டுவந்ததென வரலாற்று நூலாசிரியர்களும் ஆராய்ச்சியாளர்களும் கூறுகின்றனர். வட இந்தியாவில் மலைமண்டல பூர்வக் குடியினர்பேசும்மொழிகளில்நிறையத்தமிழ்ப் பதங்கள் காணக்கிடக்கின்றன. அதற்குச்சான்றாகபீகார் மாகாணத்து மலைமண்டல மக்கள் 'மணமகளை' அழைப்பது 'பூதேவி' என்ற ஆர்யப் பதங்கொண்டல்ல, ஆனுல் 'தரைப்பெண்' என்ற செந்தமிழ்ச்சொல்லால்தான்.பேராசிரியர் ஹீராஸ் சிந்துநதிப் பள்ளத்தாக்கில் ஆரியர் வருமுன் செழித்துவளர்ந்த நாகரீகம் தமிழர் நாகரீகமெனவும் அவர்கள் மொழியில் தமிழ்ப் பேச்சொலி உளதெனவும், குறள் கூட பாக்கும் பண்பினர் என்றும் கூறுகிருர். 'சதுர்மறை ஆரியம்வருமுன் சகமுழுதும் நினதாயின்' என அணைந்த விளக்கைச் சுட்டிக் காட்டுபவர்போல் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை கூறுகிருர்.

தென்னுடாகிய இந்நாட்டில் ஆதியில் செழித்தது தமிழ் மொழியே. காலவெள்ளத்தாலும், இன்னுட்டில் பரவிய ஆரியர்களின் மொழி, இலக்கிய அட்டூழியங்களாலும், போக்குவரவு குன்றினமையாலும், 'கன்னடமும் களிதெலுங்கும் கவின் மலையாளமும், தோன்றி ஒன்று பலவாயின. "வடுகிற்குத் தாய் வண்டமிழ்" என்ற இன்றையப் பழமொழி ஒன்றே தமிழின் சேயே தெலுங்கெனச் சொல்லும். எனினும்ஆரிய வடமொழிக்கு இச்சிறப்புத் தருபவரே அதிகம். நன்னயப் பட்டர் என்ற தெலுங்கு நாட்டு ஆரியப் பார்ப்பனர் தெலுங்கிற்கு இலக்கணங்கண்ட பொழுது வடமொழி இலக்கணத்திற்கிசைய எழுதினதால் கொஞ்சமிருந்த வேறுபாடு கடலளவாகமாறினது. இதுபோல் மலையாள நாட்டில் எழுத்தச்சன் என்ற ஆரிய நம்பூத்ரி. மலையாள மொழியைத் தமிழினின்று வேறுபாடு செய்தார். "பிராமணர்கள்" எப்பொழுதும் தமிழ்மொழி பற்றி கவலைப்படுபவரல்லர் என, இது பற்றியே, M. சீனிவாச ஐயங்கார் கூறுகிருர் (Tamil Studies Page 365) ஆரியர்களாகிய எங்கட்குத் தமிழ்மொழியாக்கம் பற்றி என்ன கவலை என அவரேகேட்கிருர். மனதிலுள்ளதைக் கூறுவது பற்றி மகிழ்ச்சி! ஆனுல் தமிழ் நாட்டிலிருந்துகொண்டு இங்ஙனம்தன் மனநிலை மாருதிருப்பதுபற்றிக் கோபம் இரண்டும் உண்டு எனக்கு.

திராவிட மொழிகளிலெல்லாம் தெலுங்கு வெகுகாலத்திற்கு முன்னரே பெரும் மாறுபாடுபட்டது. கன்னடம் அடுத்துப் பிரிந்தது. ஆனுல் மலையாளம் வெகு அண்மையில் பிரிந்தது. மலையாளம் தமிழ் மொழியே ஆனுல் பிரிக்கப்பட்ட, மாறுபாடு செய்யப்பட்ட தமிழ் மொழி. தாஞகப் பிரிந்துகொண்டதல்ல, பிரித்துவைக்கப்பட்டது.

'மலையாளம் என்ருல் 'மேடு' பள்ளம் எனத் தவருகக் கூறுபவரே அதிகம். மலையாளம் என்ருல் மலை—ஆள்—அம் என விரியும். ஆள் என்ற பகுதியடிப் பிறந்ததன்றி எவ்விதத்திலும் 'ஆழம்' என்ற பொருளில்லை. மலையாளன் என்ருல்' மலை மண்டலத்தை ஆளுபவன் என்றே பொருள். "மலை மண்டல அரசு" "வரையரசு" "கோட்டரசு" என்ற பதங்கள் பழந்தமிழிலக்கியங்களில்சேரநாட்டைக் குறித்தன. எனவே மலையாளம் தமிழ் நாட்டின்மலைநாட்டரசு என அறிக.

மலையாளநாட்டினர் தமிழர்கள். அவர்கள் மொழி தமிழ், சிறிது மாறுபாட்டுடன், எனக் கூறுவது மிகையாகாது.

கேரளநாட்டினர் தங்களைத் தமிழர் என்றே கி.பி. 3-ம் நூற்ருண்டு வரை அழைத்துக்கொண்டதுடன் தமிழர் என்று தங்களை அழைப்பதில் பெருமையும் பெருமிதமும் கொண்டனர். சான்ருக.

"..................வண்டமிழிகழ்ந்த<br>காய்வேற்றடக்கைக்கனகனும்<br>விசையனும் செங்குட்டுவன்<br>தன் சினவலைப் படலும்"

என இளங்கோவடிகள் தமிழ் முரசொலியை வஞ்சியில் முழக்கினுர்.

இன்றும், பெருந்தமிழ்க் காப்பியங்களான ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து முதலிய சிறந்த தமிழ் நூல்கள்சோழபாண்டிய நாட்டினர் செய்ததல்ல, சேரநாட்டினர் செய்தவை.

சேரநாட்டின் ஊர்ப்பெயர்முடிபுகள் பெரும்பாலும் தமிழ் நாட்டின் ஊர்ப்பெயர்களை ஒத்துஇருப்பது. மலையாளம் தமிழ்நாடு என்பதை விளக்கும் சான்ருக பெரும்பான்மையான சேரநாட்டுஊர்கள் இங்கு போன்றே 'சேரி' 'குடி' 'கோடு' 'காடு' 'குண்டு' 'தாலி' 'இருப்பு' என முடிவதைக் கண்ணுள்ள எல்லாத் திராவிடரும் காணலாம். கருத்துள்ளவர்கள் கண்டு ஆராயலாம்.

சாதிப்பெயர்களிலும் தொழிற்பெயர்களிலும் இருநாடுகளிலும் பொருந்த தொடர்பு இருப்பதைக் காணலாம். எண்ணெய் பிழியும் செட்டியாரை மலையாளத்தில்'செக்கர்' "வாணியர்" என்று அழைக்கின்றனர். 'செக்கு' என்ற சொல்லிலிருந்து 'செக்கர்' என வந்தது. நாம் 'கோஞர்' என்று அழைப்பதை மலையாளநாட்டினர் 'எறுமன்' "கோல்யான்" எனத் தனித் தமிழில் சொல்கிருர்கள். எருமையும் அங்கு மேய்ப்பதால் 'எறுமன்' என வந்தது. 'குறுநில அரசன்' அல்லது 'குறுநிலக்கோன்' என்று நாம் சொல்வதை அந்நாட்டினர் "குன்னிலக் கோன்" எனச்சொல்கின்றனர்.

ஒரு நூற்ருண்டுக்கு முன்புவரையிலும் திருவனந்தபுரத்தில்சர்க்கார் மொழியாக (State Language) தமிழ் மொழியே இருந்துவந்திருக்கிறது,என்பதுகுறிப்பிடத்தக்கது.

இவ்வளவு பெருமளவில் தமிழ் நாடாயிருந்த கேரளம் எங்ஙனம் மலையாளமானதென இனிக் காண வேண்டும்.

அன்பரசன் அசோகன் புத்தமதத்திற்குப்பெரும்ஆதரவுதர பார்ப்பனீய இந்துமதம் வடநாட்டில் தேய்ந்தது. இந்துமதத்தால் வாழ்ந்த ஆரியப் பார்ப்பனர்கள் திரள்திரளாக அப்பொழுது திராவிட நாட்டினுள் நுழைந்தனர். இந்தக் கூட்டம் திராவிட நாட்டைப் படுத்திய பாடு கொஞ்சமல்ல. ஆரியத்திற்கடிமைபோன மயூரவர்மன் என்ற சேர அரசன் வடநாட்டிலிருந்து ஏராளமாகப் பார்ப்பனர்களை 'இறக்குமதி' செய்தான். இம்முறையைப்பாண்டியசோழ வேந்தர்களும் பின்பற்றினர். முதலிலேயே இக்கூட்டம் எங்ஙனம் தமிழர் மீது ஆதிக்கம்கொள்ள இயன்றதென நீங்கள்கேட்கலாம். "இங்ஙனம் வந்த ஆரியர்கள் முதலில் பணக்காரத்திராவிடர்களிடம் வீட்டு வேலைக்காரர்களாகவும், தூதர்களாகவும்இருந்தனர். ஆனுல் வடமொழி வன்மையாலும் 'ஏமாற்று மத வித்தைகளாலும்' அரசர்களுக்கும்செல்வர்களுக்கும் மந்திரிகளாகவும் புரோகிதர்களாகவும் ஆயினர்" (page 349 Tamil Studies by M. SreenivasaIyengar) "இங்ஙனம் வந்த ஆரியர்கள் தங்களைத் தனிப்படுத்திக் கொண்டனர். திராவிடர்களுடன் கலப்பு செய்துகொள்ளவில்லை' என ஐயங்கார் கூறுகிருர்.

இந்த ஆரியர் கேரளநாட்டில் நம்பூத்ரி என்றும் சோழபாண்டிய நாட்டில் அந்தணர், பார்ப்பார், என்றும் சிறப்புப்பெயர்களை அக்காலத்திராவிடர்கள் கொடுத்தனர்.

ஒவ்வொரு மொழியிலும்எழுத்துநடைக்குமபேச்சுநடைக்கும்பரந்த வேறுபாடு காணலாம். இது தமிழ் மொழிக்குரிய தனிக்குணமன்று. எம்மொழியிலும் உண்டு. கேரள நாட்டில் இவ்வேறுபாடு மிகைப்படுத்தப்பட்டதுடன் அக்கொச்சைப்பேச்சுநடை எழுத்தளவிலும் இடம் பெற்றது. இதற்குப்புதிதாக வந்த ஆரியக்கூட்டம் தக்க உதவி செய்ததுடன் தங்கள்மனம்போன போக்கில் வார்த்தைகளைத்திரித்தும் பெயர்த்தும் விளக்கினர்.

மேலும் ஆரிய ஆதிக்கம்கோவில்களுடன் நிற்காமல் அரசமன்றங்களிலும் பரவினது. இதஞல் அரண்மனைகள் அவர்கள் சூதாடும் சாலைகளாயின. அரசர்கள் ஆரியர் கட்டளையை நிறைவேற்றும் தாசர்களாயினர். சேர நாட்டரசியலில் ஆரியர் ஆதிக்கம் ஓங்கியவுடன் சேரநாட்டு அரச குடும்பத்தினர் மற்றத்தமிழ்நாடுகளான அரசபரம்பரையுடன்மணத்தொடர்புசெய்து கொள்ளாதவாறு தடுக்கப்பட்டனர். இறுதியான மணத்தொடர்பு கி. பி. 1299ல் குலசேகரன் என்ற கேரள வேந்தன் வீரபாண்டியன் மகளை வைகைக்கரையில் போரிற்குப்பின் மணந்ததே!

இதன்பின் வந்த தொடர்பற்ற இருட்காலத்தில்தான் மலையாள மொழித் தோற்றத்திற்கான அடிப்படை போடப்பட்டது. மலையாள மொழிக்கு கி. பி. 13ம் நூற்ருண்டின்மத்தியப்பகுதிக்குமுன் இலக்கியம் இருந்ததில்லை. தமிழ்மொழியின் இலக்கியம் கி. மு. 5000 வருடம்வரை செல்லும்.மலையாள இலக்கணம் 1860 கி. பி. யில் கண்டர்ட் என்ற வெள்ளையனுல் செய்யப்பட்டது. தமிழிலக்கணம் கி.மு. 200க்கும் முற்பட்டது.

ஆரிய ஆதிக்கம் பரவுவதற்கு முன் கேரளநாட்டில் தமிழ் மொழி எங்ஙனம்மலையாளமானது எனக்காண்போம்.எடுத்துக்காட்டுகள் சிலதருகிறேன். சேரநாட்டில் கி. பி. 973ம் வருட சிலாசாசனமொன்றில் அக்காலத்தமிழ்ப்பதங்கள் எவ்வாறு மாறுபட்டிருந்ததெனத்தெரியலாம். அதில் உள்ள—வுள்ள சங்கரன்—சங்கரன் இடம்—எடம், அமுநினுக்கு—அமுநின்னு, அவனுக்கு — அவனக்கு எனமாறுபட்டுக்கிடக்கிறது.

கோட்டயத்தில் கிடைத்த 1320 கி.பி வருடசிலாசாசனத்திலுள்ள தமிழ் கீழ்வருமாறு:— வாயில்= வாதில், படிஞாயிறு=படிஞ்ஞாயிறு, உள்ள=வுள்ளி, உண்டாகில் =உண்டாயில், இருந்தருள= இருன்னருள,எழுந்தருளி=எழுன்னெள்ளி.

இவ்விரு எடுத்துக்காட்டுகளும் கொச்சைப்பேச்சுநடை எங்ஙனம் எழுத்தளவிலும் இடம் பெற்றதென காட்டப் போதுமானவை.

இத்துடன் போதாதென்று வடமொழி வார்த்தைகளையும், தொடர்களையும் ஆரிய நம்பூத்ரிகள் கேரள நாட்டில் வழங்கிய தமிழிலக்கியத்தில்மனம் போனபடி சேர்த்தனர். இதற்குத்தக்க ஆதாரம் ஆரிய நம்பூத்ரிகள் அதிகமாகக் கேரளத்தில் பரவாமுன் தோன்றிய தமிழ்நூற்களான ஐங்குறுநூறு, சிலப்பதிகாரம், பதிற்றுப்பத்து, வெண்பாமாலை முதலிய நூற்களில் வடமொழிப்பதங்கள் குறைந்த அளவில் காணப்பட, நம்பூத்ரிகள் ஆதிக்கம் மிகுந்து தலைவிரித்தாடிய சேரமான் குலசேகரன் காலத்தில் தோன்றிய தமிழ் நூற்களில் வடமொழி விரவி வருதல் காண்க. ஆரிய ஆதிக்கம் தலைவிரித்தாட ஆரம்பித்தவுடன்வடமொழித் தொடர்பும் இதிகாசபுராணங்களும்

(அடுத்த பக்கம் பார்க்க)

பாரதிதாசன்

## நிதி அளிப்பு விழா

★

அன்பர்கள் பலர் கேட்டுக் கொண்டதனுல், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்கு நிதி அளிக்கும் விழா நடத்த இருந்த நாள் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது.

சென்னையில் மிகச் சிறப்பான முறையில், மேற்படி விழா, ஜுலை மாதம் 21-ந்தேதி நடைபெறும்.

இசை அரசு, திரு. தண்டபாணி தேசிகர், இன்னிசையும்,

குளிக்கரை, நாதஸ்வர வித்வான் திரு. பிச்சையப்பா அவர்களின் நாதஸ்வரக் கச்சேரியும், ஏற்பாடாகி இருக்கிறது. எல்லாக்கட்சித் தலைவர்களும், பிரபலஸ்தர்களும், பாராட்டுரை வழங்க ஏற்பாடாகி இருக்கிறது.


"பொற்கிழி" ஊர்வலம் நடைபெறும். கவிஞருக்குப் "பொன்னுடை" அணிவிக்கப்படும். விழா மன்றத்திலேயே, சீர்திருத்த நாடகம் நடத்தவும் முயற்சிகள் துவக்கப்பட்டுள்ளன.

21-7-46, விழா நாள். 15-7-46 வரை, அன்பர்கள், நிதிக்கு நன்கொடை தந்துதவலாம்.

அண்ணுதுரை.



ஜெயராம்காயகல்பலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
துடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
உலைகளைப்போக்கிமலத்தைச்சுலபமாய்ப்பிரிக்கும்
அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயகல்ப லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2—2—0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, [illegible], கும்பகோணம்.



உறையூர்

**எஸ். எம். எஸ். ஆர். பி.**

சொந்தக் கைத்தறி கலர்புடவைகள் & 3-அகலம் தோத்திகள், சரிகை அங்க வஸ்திரங்கள்.

100, 80-நெ. நூலில் தயார் செய்யப்பட்டது. உத்திரவாதமுள்ள சாயம். உறுதியான—உடை, சுத்தமான—சரிகை, உயர்தரமான—ரகங்கள், நாணயமான விலைகள்.

S. M. S. R. பாலசுந்தரம்,
கைத்தறி ஜவுளி வியாபாரம்,
34, பஞ்சவர்ணஸ்வாமிகோவில் தெரு,
உறையூர் p. o. திருச்சி.

## மலையாள மொழி

*7-ம் பக்கத் தொடர்ச்சி*

ட சோழபாண்டிய நாட்டில் தோன்றினதற்குப் பன்மடங்கு அதிகமாகக்கேரள நாட்டில்தோன் றன.

கி. பி. 1350-ல்தோன்றியகன்ன சட்·ஙளிக்கரின் இராமாயணத்தில் அதிக வடசொல்காணப்படவில்லை. 1550 கி. பி-ல் தோன்றிய கிருஷ் ணப்·டு என்ற ஆசிரியர் செய்த நூற்களிலும் வடமொழி அருகியே காணப்படுகிறது. இதனல் அவ னினத்தவராகிய ஆரிய நம்பூத்ரி கள் அவனைப் புறக்கணித்து ஒதுக்குவ·யினர். ஆனல் இன்றும் கேரளநாட்டுப் பார்ப்பனரல்லாதார் அவ்வாசிரியனைப் போற்றுதல் கண்கூடு.

கி. பி. 1650-ல் தோன்றியஎழுத்தச்சன் என்ற ஆரிய நம்பூத்ரியால் அருந்தமிழ்ப் பதங்கள் உருமாற்றமடைந்தன. அவன் எழுத்துக்களின் உருவையே விட்டவுட்டு (vattalatu) என்ற முறையால் சிதைத்துச் சித்திரவதை செய்து புதுக்கலை செய்ய ஆரம்பித்தான். வடமொழி வார்த்தைகளைத் தன்னிஷ்டப்படி ஏராளமாகச் சேர்த்தான். இவ்வாரியன் எழுதிய மலையாளத்தை வடமொழியாகிய சமஸ்கிருதம் தெரியாதவர்கள்படிக்க இயலாது, இவனுக்கு மலையாளம்படிப்பதென்றல் வடமொழி படிப்பதென்பதே பொருள். ("we may boldly say that எழுத்தச்சன் was the first Malayalam writer who gave death bow to Tamil mother-tongue; for this act of vandalism he is admired by the people of Malabar as the father of Malayalam, classical literature")

முன்காலத்திருந்தே சேரநாட்டிற்கும் பிற இருதமிழ்நாடுகளுக்கும் இடையே உயர்ந்த மலைகளும் அடர்ந்த காடுகளும் இருந்ததால் போக்குவரவுத்தொடர்பு முயற்கொம்பானது. தமிழ்நாட்டிலேயே ஒருபகுதிக்கும் பிறிதொரு பகுதிக்கும் பெருத்த மாறுபாடு இருப்பதைக்காண்க. திருநெல்வேலித்தமிழிற்கும் தஞ்சை, மதுரைத் தமிழிற்கும் வேறுபாடிருப்பதை நாம் காணலாம். நாஞ்சிநாட்டுத்தமிழும் காஞ்சிபுரத்தமிழும் உச்சரிப்பில் விதவிதமானது. இங்ஙனமே மலையாளத்தமிழ் நாளாகஆக தேங்கிக்கிடந்து நம்பூத்ரிகள் கைப்பட்டு மாறிப் போனது.

சேரநாட்டரசியலில் ஆரிய நம்பூத்ரிகள் ஆதிக்கம் ஓங்கவும் அந்நாட்டு அரசகுடும்பத்தினர் பிற இருதமிழ் நாட்டரசுடன்கொண்ட எல்லாத் தொடர்புகளையும் நிறுத்திக்கொள்ளத் தலைப்பட்டனர்.

பழந் தமிழிலக்கியங்களைப் பேணிப் பாதுகாத்துவந்த சேர நாட்டுத்தமிழர்கள் பின்புகல்வியையும் தமிழையும் புறக்கணிக்க ஆரம்பித்தனர். மலையாளிகளில் பெரும்பகுதியினர் வணிகம், உழுதொழில் படைத்தொழில் முதலியவற்றில் வாழ்க்கையைக்கடத்த இறங்கினர். இதனல் அரசஉதவியும் சொத்தும் பெற்றுச் செழித்த ஆரியர்களின்சொத்தாகக் கல்விமாறினது.

ஆரியத்திற்கு அடிபணிந்த பிற்காலச் சேரவேந்தர்கள் திராவிடர்களிடமிருந்து நிலங்களைப் பறித்து ஆரிய நம்பூத்ரிகளுக்கு'இறையிலா' நிலங்களாக(Tax Fee)அளித்தனர். ஆகையால்சேரநாட்டில் கோவில் குளம்கட்டி திராவிடர்களை, ஏமாற்றிச்சுரண்டவேண்டுமென அவசரமில்லாமல் போனது. கோவில்கள் இதனல் சேரநாட்டில் எண்ணில் குறைந்தன. கோவில் குளம் முழுக்கு கும்பாபிஷேகம் ஏற்படுத்திச் சோழபாண்டிய நாட்டினர் ஆரியத்தை ஆதரிக்கசேர நாட்டினர் நிலங்கொடுத்தாதரித்தனர். "கி. பி. 650-லிருந்து கி. பி. 950-க்கு இடையே உள்ள 300 வருடங்களில் 14250 சதுரமைல் உள்ள கேரள நாட்டில் 1 சிவாலயமும் 13—வைணவாலயங்களும், 3259 சதுரமைல் உள்ள தஞ்சை ஜில்லாவில்மட்டும் (சோழ நாட்டின் ஒருபகுதி) 300, சைவவைணவக் கோவில்கள் இருந்தன."

மேலும் மலையாள நாட்டில் குளிர்ச்சி அதிகம். மழை அதிகம் பெய்யும் மலைநாடுஅது. ஆண்டொன்றுக்குச் சுமார் 116 அங்குலமழை சராசரி அங்கு பெய்கிறது. இதனல் காலப்போக்கில் அவர்கள் பேச்சொலியே பாதிக்கப்பட்டது. இதனல்தான் இன்றைக்கும் மலையாளமொழி காதிற்கு இனிமையும் மென்மையுமுடையதாய்க் காணப்படுகிறது. "Malayalam is the mother tongue of Aryan oppressed Dravidian race whose vocal organs are affected by incessant cold" Bishop caldwell

இங்ஙனம் கால வெள்ளத்தால் மட்டுமன்றி இந்நாட்டிற்கு வந்த ஆரிய வெள்ளத்தாலும் மாறுதலை உட்கொண்ட மலையாளம் தமிழ்மொழியே. மலையாளிகள் தமிழர்களே. இன்றைக்கும் மலையாள மொழியில் உள்ள சமஷ்கிருதச் சொற்களை யெல்லாம் எடுத்துவிட்டால் அது தனித்தமிழாயிருப்பதை அறிவுள்ள எந்தமொழியாராய்ச்சிக்காரரும் ஒப்புக்கொள்வர். கேரள நாட்டினர் வேறு யாருமல்ல, நம்தமிழரே. எனவே திராவிடத்தனியரசில், மலையாள நாட்டுத் தமிழர்கள் தங்கள் பண்டையத் தொடர்பை நினைத்து, இடையே ஏற்பட்ட ஆரிய நச்சுக்கள்ளியை அறவேபோக்கித்தன்பங்கை செய்வார்கள்.

# "உலக முன்னேற்றத்தில்"

## தாழ்த்தப்பட்டவர்களின் நிலை

[மின்னொளி, கொழும்பு]

★

"அட்டாமிக் சகாப்தமெனும்," இந்த நவயுகத்தில், மன்னுதி மன்னர்கள் மண்ணைக்கவ்வும் இந்த நூற்றுண்டிலே, தொன்றுதொட்டு தாழ்த்தப்பட்டு வீழ்த்தப்பட்டவர்கள், "இருபத்தைந்து வருடங்களுக்கு," முன்பு இருந்தநிலைமைக்கும், இன்றுள்ள நிலைமைக்கும் வித்தியாசமுண்டா? என்பதை அரசியலில் கடைத்தேற ஆக்க வேலைகள் செய்யும், ஒதுக்கப்பட்ட சமுதாய அறிவாளர்கள் ஆழ்ந்து சிந்திப்பது அவசியம்.

காலப்போக்கில் கல்வித்துறையில் வெகு சிரத்தைஎடுத்துக் கல்வி கற்று, பட்டதாரிகளாகி உத்தியோகங்கள் செய்கிறவர்களும்நம் மினங்களில் உண்டு. இப்படிப் பட்டவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே. இந்திய சமுதாயத்தினர்களில் நாட்டிற்கு, முதுகெலும்பாகவுள்ள, நம் மக்கள், சுமார் எட்டுகோடி. எட்டுகோடி மக்களில், குறைந்தது பலஆயிரம் பேர்களாவது கல்வியில் முன்னேற்றம் அடைந்திருக்கிறார்களா? என்றல், இல்லை. காரணம் என்ன? இன்றைய சமுதாய அமைப்பு அறிந்ததே!

உலக முற்போக்கிற்கும் தாழ்த்தப்பட்டவர்களின் இன்றைய வாழ்க்கைக்கும், சம்பந்தமே இல்லையாதென்பதுஇன்றைய இனப்பற்றுடையவர்களின், ஏகோபித்த கருத்து. இங்ஙனம் நமதுசமுதாயங்கள் மூதாதையர்களின் மூடக்கொள்கைகளை உடைத்தெறியாததற்கு மூலகாரணம், "ஆங்கிலேயரின்" அகப்பட்டதை அள்ளிசுருட்டுடா, ஆண்டியப்பா ,ஆட்சியும், பார்ப்பனர்களின் பச்சோந்தி வேஷங்களும்நம்மவர்கள்ஐக்கியப்படவிடாமல்பலஆண்டுகளாகசெய்தநரித்தந்திரங்களுமேயாகும். பள்ளன், பறையன், சக்கிலியன், என்றபிராமணநாமங்களை, நாம் இன்றுவரையும் நம்பி ஒற்றுமையின்மையால், உருக்குலைந்துஉழைத்தஊதியத்தை, பாடுபடாக் கூட்டத்திற்குத்தாரை வார்த்து நோயால் உருக்குலைந்து, பசியால் வாடி, புழுவாகநெளிந்து, பூமியில் வாழுகிறேமென்றல் பொய்யாகுமா?

நமது கிராமங்களை நோக்குவோம். குழந்தையைஈன்றமுப்பது நாட்களில், சிசுவுடன், நாற்றநட, களைபிடுங்க, கல் அடிக்க, கூலிவேலை செய்யப்போகும் நமது தாய்மார்களின், வாழ்க்கைக்குவிமோசனம் பிறந்திருக்கிறதா? நான்குவயது முதல் கலியாண மாப்பிள்ளைப்பருவம்வரையும்,சோற்றுக்குப் ஒருமுழத் துண்டுக்கும்நம்சகோதரர்கள்மாடு மேய்க்கும் அறியாத்தனம் அகற்றப்பட்டிருக்கிறதா? சாணி வைக்கோலால் கூரை வேய்ந்துகுனிந்து உள் நுழையும் குடிசை மாற்றமடைந்திருக்கிறதா? ஆண்டையைக்கண்டால் அடியேன் சாமி எனும்அடிமை,பயங்கொளித்தனம் அகன்றிருக்கிறதா? சிறுகுற்றத்திற்கும் தீக்குச்சியை நீட்டும் பார்ப்பனியதாசர்களின் சிறுபிள்ளைத்தனம் மறக்கப்பட்டிருக்கிறதா?

கடந்த இருநூறு வருடங்களாக சிறுபான்மையினரின் நலவுரிமைகளுக்கும் தாழ்த்தப்பட்டோரின் பாதுகாவலுக்கும்," இந்தியாவில் தனது ஆட்சியை நீடிப்பதாக கோயபல்ஸ் பிரசாரம் செய்யும், ஆங்கிலேயர்களாலும், நமது இரத்தத்தினல் உண்டு களித்து,உல்லாசமடைந்து, சங்கரா,சிவசங்கராஎன ஒப்பாரி வைக்கும் வைதிகத்தார்களாலுமே, நாம் இக்கெதிக்காளாகினேம், போதுமப்பா, இந்தபெல்ஸன்கேம்ப் வாழ்க்கைக்கு அடிகோலின பிரிட்டிஷ் நிர்வாகம். வெறும்பசப்பு வார்த்தைகளால் நம்மை, பன்றி, நாய்,பறவை,பட்சி பல்லி பூரான் முதலியவைகளிலும் கீழானவர்களாக்கியதல்லாமல், அதிகாரத்தை பார்ப்பனிய தொண்டர்களுக்கீய்ந்து, நம்மவர்களை இருட்டறையில்தள்ளும்இந்தியஅரசியல் நாடகம் இன்னமும் நடைபெறுகிறது.

## கவிஞர் மலர்

★

**21—7—46,** அன்று, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுக்குப் பொற்கிழி அளிக்கப்படும் விழாவினையொட்டி, "திராவிட நாடு" — கவிஞர் மலராக, விசேஷக் கட்டுரைகளுடன் வெளிவரும்.

புரட்சிக் கவிஞர்கள் பற்றியும் கலைபற்றியும், பல அரிய கட்டுரைகளும், சிறுகதை முதலிய சுவைமிக்க பகுதிகளுடன், "திராவிட நாடு" — கலர் அச்சு, படங்கள் முதலிய வேலைப்பாடுகளுடன் டிம்மி ¼ சைசில் **32** பக்கங்கள் கொண்டதாக வெளிவரும். மலர் விலை 4-அணு.

## கொழும்பில் திராவிட நாடு ஏஜெண்டு

●

1—6—46 முதல் கீழ்க்கண்டவரை தற்காலிகமாகக் கொழும்பு ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறது.

S. சந்தனம்
59, காலிரோட்,பம்பலாபிட்டியா
கொழும்பு

**தாதுபுஷ்டிக்கு**

மஹா வீரிய லேகியம், அயக்காந்த தங்கசெந்தூரம்

**30 வேளை: ரூபா 10—0—0**

இணையற்ற மருந்துகள் என்றநற்சாட்சிகள்குவிகின்றன. தகாத நடத்தைகளாலும் வியாதிகளினலும் மெலிந்தவர்களுக்கும் மேக உஷ்ணத்தினல் நரம்புகள் தளர்ந்து தாதுக்கட்டு இல்லாதவர்களுக்கும் நரம்புகளை முறுக்கேற்றி சரீரம் யௌவன தேசசுடன் பிரகாசிக்கும். தற்கால சாந்தியாக மயக்கம் தரும் மருந்துகளைவாங்கி ஏமாறுதீர்கள்.

சரஸ்வதி வைத்திய சாலை,
பழனி (S. I.)

Edited Printed and Published by C. N. Annadurai, M.A., at "Dravida Nadu" Press, 317-319 Hodgsonpet, Conjeeveram.